# பட்டதாரிகள் பிரச்னையைத் தீர்க்க யு. என். பி. மகாநாட்டில் தீர்மானம்

Registered as a News paper in Ceylon

விலை சதம் 15★★

ஈழநாடு சந்தா
வாரப்பதிப்பு மாத்திரம்
மூன்று மாதம் — ரூ. 4-00
ஆறு மாதம் — ரூ. 7-50
ஒரு வருடம் — ரூ. 14-00
முற்பணம் கட்ட வேண்டும்
தபால் அல்லது ஆள்மூலம் அனுப்பப்படும்.

# ஈழநாடு

EELANADU

மலர் 11

தபால்பெட்டி எண்: 49 — இதழ்: 15

போன்: 389 — National Tamil Daily — தேசிய தினசரி

ஈழநாடு சந்தா
தினப் பதிப்பு
மூன்று மாதம் — ரூ. 18-00
ஆறு மாதம் — ரூ. 34-00
ஒரு வருடம் — ரூ. 66-00

யாழ்ப்பாணம் மாசி 14 ஜுஹஜ்: 7 செவ்வாய்க்கிழமை [25-2-69]

குளியாப்பிட்டி, திங்கள் நாட்டிலுள்ள கலைப்பட்டதாரிகளின் வேலையில்லாத் திண்டாட்டத்தை தீர்த்து வைப்பதற்கு துரிதமாக நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று வற்புறுத்தும் தீர்மானம் ஒன்றை இன்று அக்குறணை ஆட்சிமன்ற உறுப்பினர் திரு. ஹமீட் ஐக்கிய தேசியக்கட்சி மகாநாட்டில் சமர்ப்பித்தார்.

தனியார் துறைகளிலும் பொதுத்துறைகளிலும் ஏற்படும் வேலைவாய்ப்புக்களை கலைப்பட்டதாரிகளைக் கொண்டு நிரப்புவதின் மூலம் இவர்களின் வேலையில்லாப் பிரச்னைக்கு துரித முடிவுகாணமுடியும் என்று இத்தீர்மானத்தில் யோசனை கூறப்பட்டிருக்கின்றது.

நாட்டில் வேலையில்லா திண்டாட்டம் பெரிய பிரச்னை மட்டுமல்ல ஆபத்தான ஒன்றும் கூட ஆனால் படித்தவர்கள் மத்தியில் ஏற்படும் வேலையில்லாத் திண்டாட்டம் மிகவும் பயங்கரமான ஒரு அம்சம் என்று திரு. ஹமீட் தமது தீர்மானத்தின் மீது பேசுகையில் குறிப்பிட்டார்.

எஸ். டபிள்யூ ஆர். டி. பண்டாரநாயகா காலத்திலேயே வேலையில்லாதிண்டாட்டம் மோசமாகிவந்தது. திரு. பதியுதீன் முகம்மது கல்வி மந்திரியாக இருந்தபோது இந்தப் பிரச்னை மிகவும் சிர்குலைந்து போக நேர்ந்ததுஎன்று திரு. ஹமீட் குறிப்பிட்டார். இந்த ஆண்டுடன் வேலையில்லாப் பட்டதாரிகளின் எண்ணிக்கை 20 ஆயிரமாக அதிகரிக்க கூடிய ஆபத்து ஏற்பட்டிருப்பதாகவும் புதியதிட்டங்களை வகுத்து வெகுவிரைவில் இந்த பிரச்னைக்கு ஒரு முடிவு கட்ட வேண்டுமென்றும் அவர் வற்புறுத்தினார்.

## உணவு அபிவிருத்தி: பிரேமதாஸா பாராட்டு

நாட்டின் உணவு அபிவிருத்தியில் திட்டமிட்டு முன்னேறி வருவதற்காக அரசாங்கத்தைப் பாராட்டும் தீர்மானம் ஒன்றை உள்ளூராட்சி அமைச்சர் திரு. பிரேமதாஸா மகாநாட்டில் சமர்ப்பித்தார்.

பொருளாதாரம், கல்வி, விவசாயம் ஆகியதுறைகளில் அரசாங்கம் கண்டுள்ள முன்னேற்றங்களுக்காகவும் இந்தத்துறைகளில் திட்டமிட்டு முன்னேறிவருவதற்காகவும் இந்தத்தீர்மானத்தில் அரசாங்கத்துக்கு நன்றி தெரிவிக்கப்பட்டுள்ளது.

இத்தீர்மானத்தின் மீது திரு. பிரேமதாஸா பேசுகையில் தேர்தல் விரைவில் நடக்கலாம் என்றும் அதற்குத் தயாராய் இருக்கும்படியும் பிரதம மந்திரி குறிப்பிட்டதைச் சுட்டிக்காட்டி கட்சியின் வளர்ச்சிக்கு எந்த வகையிலும் ஒன்றும் செய்யாதவர்கள் எல்லாம் இப்பொழுது தேர்தலில் போட்டியிடுவதற்கு முன்வருகிறார்கள் என்றும் ஒரு தொகுதியில் பலர் வேட்பாளர்களாகப்போட்டியிட டிக்கட் கேட்கிறார்கள் என்றும்குறிப்பிட்டார். இவ்வாறு கட்சியில் பிளவுஏற்படவிடக் கூடாதென்றும் இது எதிர்க் கட்சிகளுக்கு பெரிய வாய்ப்பாகப்போய்விடும் என்றும் அவர் எச்சரித்தார்.

நாவலர்சிலை

## கலை நிகழ்ச்சி

பம்பலப்பிட்டி, திங்கள் நாவலர் சிலை அமைக்கவும் நூலகம் மணிமண்டபம், வேதாகம் பாடசாலை போன்றவை நிறுவவும் நிதி திரட்டும் வேலையில் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் சபை தீவிரமாக ஈடுபட்டுள்ளது. இதற்காக இலங்கையின் பல்வேறிடங்களிலும் நிதி திரட்டும் இயக்கங்கள் பல ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

கொழும்பில் நிதி திரட்டுவதற்காக அடுத்த மாதம் 11-ம் திகதி பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் செல்வி கீதாஞ்சலி சிவாஜி துரையின் நாட்டிய விழாவொன்று ஏற்பாடுசெய்யப்பட்டுள்ளது. இந் நாட்டிய விழாவின்போது மலரொன்றும் வெளியிட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

# 'சர்வாதிகார ஆட்சி அமைக்க வந்தவர்களை துரத்திவிட்டேன்

## 1952-ம் ஆண்டிலிருந்த டட்லியல்ல நான்'

### குளியாப்பிட்டியில் பிரதமமந்திரி

— குளியாப்பிட்டியிலிருந்து நமது நிருபர் பெரி. சுந்தரலிங்கம் —

குளியாப்பிட்டி, திங்கள்

தம்முடன் சினேகிதர்கள் போல் நடித்து ஆட்சியைக் கைப்பற்றி இலங்கையில் சர்வாதிகார ஆட்சியை அமைக்க முயன்றவர்களைக் கண்டுபிடித்து துரத்திவிட்டதாக பிரதமமந்திரி திரு. டட்லி சேனநாயகா குளியாப்பிட்டியில் நடை பெற்ற கூட்டமொன்றில் பேசுகையில் தெரிவித்தார்,

குளியாப்பிட்டியில் நடைபெற்ற ஐக்கிய தேசிய கட்சியினரின் 18-வது மகாநாடு முடிவில் நடைபெற்ற மாபெரும் கூட்டமொன்றில் பிரதமர் பேசினார்.

அவர்மேலும் பேசுகையில் 1952ம் ஆண்டிலிருந்த டட்லி சேனநாயகா அல்ல நான். நான் இப்போது எ[illegible] தகப்பனாரான டி. எ[illegible] சேனநாயகாவின் உண்மையான மகன். தேசிய ஐக்கியத்துக்காகப் பாடுபட்டுழைத்த எனது தகப்பனாரின் [illegible] யா[illegible] பின்[illegible] வருகின்[illegible] நே[illegible] எதிர்க்கட்சியினரின் பிரசாரத்திற்காகப் பயந்து

கத்தை கைப்பற்றுவதற்காக வகுப்புவாத பிரசாரங்களை நாட்டில் கிளப்[illegible]ந்தனர். அதுவும் பயனளி[illegible]யாமல் போகவே தேசிய அரசாங்கத்திலுள்ள மந்திமார்களைக்குறை கூறி பிரசாரம் செய்ய[illegible] ஆரம்பித்துள்ளார்[illegible]. இப்படி பிர[illegible]ம் செய்யப்படுபவர்க[illegible]ள் கல்வி மந்திரி திரு. இரிய

இலங்கையிலிருந்து இந்தியாவுக்கு

## 5 இலட்சத்து 25 ஆயிரம்பேர் ஜுலைமுதல் திரும்புவர்

### தமிழ்நாடு சட்டசபையில் மதியழகன்

சென்னை, பெப். 25

இந்தியா திரும்பும் இலங்கை- இந்தியரின் மறுவாழ்வு சம்பந்தமாக நடவடிக்கைகள் மேற் கொள்ளப்பட்டு வருவதாக இன்று ராஜ்ய கீழ் சட்டசபையில் நிதியமைச்சர் திரு. மதியழகன் கூறினார்.

15 ஆண்டுகளில் 5 லட்சத்து 25 ஆயிரம் பேர் இந்தியா திரும்புவர்களென எதிர்பார்க்கப்படுவதாகவும் வருகிற ஜுலை மாதம் முதல் இவர்கள் இலங்கையிலிருந்து புறப்படுவார்களெனவும் அவர் மேலும் கூறினார். சுதந்திரக்கட்சி அங்கத்தவர் ஒருவரின் கேள்வியொன்றுக்குப் பதிலளிக்கையிலேயே திரு. மதியழகன் இதைத் தெரிவித்தார்.

இது ஒரு தேசிய பிரச்னையாதலால் இதில் அரசுகூடிய கவனம் செலுத்துவதாகவும் அவர் கூறினார்.

'மாணவர்களின்

## தேவையை நிறைவாக்க தனியார் கல்லூரி அவசியம்'

யாழ்ப்பாணம், செவ். அதிபரிவும் காம் கல்வி

வெளியேற

தமிழ்நாடு சட்டசபையில்

## பம்பாய் சிவசேனை இயக்கம் பற்றிய பிரேரணை நிராகரிப்பு

சென்னை, பெப். 25

பம்பாயில் நடைபெற்ற சிவசேனை இயக்கத்தினரின் ஆர்ப்பாட்டம் சம்பந்தமாக இன்று ராஜ்ய கீழ் சட்டசபையில் சமர்ப்பிக்கப்பட்ட ஒத்திவைப் பிரேரணையை சபாநாயகர் நிராகரித்தார். இது சம்பந்தமாக சமர்ப்பிக்கப்பட்ட 3 பிரேரணைகளும் நிராகரிக்கப்பட்டது.

பம்பாயில் நடைபெற்ற சம்பவங்கள் சம்பந்தமாக மகாராஷ்டிரபதி அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளதாகவும், அது ஒரு உள் விவகாரமாதலால் இதில் தலையிடுவது தேசிய ஒருமைப் பாட்டுக்கு உலைவைப்பதாகும் என்றும் தமிழக முதல்வர்திரு கருணாநிதி பதிலளிக்கையில் கூறினார். இது சம்பந்தமாக நடவடிக்கை தொடர்ந்து மேற்கொள்ளும்படி பம்பாய் அரசாங்கத்திற்கு கடிதம் அனுப்பியுள்ளதாகவும் அவர் தெரி

சிவசேனைஇயக்கத்தினரின் ஆர்ப்பாட்டத்தினால் நூற்றுக் கணக்கான தமிழர்கள் பாதிக்கப்பட்டுள்ளதாவும், இதில் தமிழ்நாடு அரசாங்கம் கவனம் செலுத்த வேண்டுமென்றும் அந்த பிரேரணையில் எதிர்க் கட்சியைச் சேர்ந்த சில அங்கத்தவர்கள் கேட்டிருந்தனர்.

## வன்னியசிங்கத்திற்கு சிலை

அளவெட்டி, திங்கள் அமரர் வன்னிய சிங்கத்துக்கு சிலை அமைப்பதுஎன தமிழரசு வாலிப முன்னணி கிளை முடிவு செய்துள்ளது.

அமரர் வன்னியசிங்கத்துக்கு சிலை அமைப்பது சம்பந்தமாக ஆராய நேற்று கீரிமலை நகுலேஸ்வரா சன சமூக நிலையத்தில் தமிழரசு வாலிப முன்னணி கீரிமலைக் கிளை கூடியது.

வுக்கு சிலை அமைக்க இருப்பதற்கு பாராட்டு தெரிவிக்கப்பட்டதுடன் அவர்களுக்கு உதவி செய்வதெனவும் தீர்மானிக்கப்பட்டது.

வன்னியசிங்கத்தின் சிலை நிறுவுவதற்கான பணத்தை மக்களிடம் இருந்து வசூலிப்பதென இக் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது. மற்றும் பல பிரச்சனைகள்

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

'மாணவர்களின்

# தேவையை நிறைவாக்க தனியார் கல்லூரி அவசியம்'

யாழ்ப்பாணம், செவ். விஞ்ஞானம், கலை ஆகியவை மதிப்பிழந்திருக்கும் இந்நிலையில் மாணவர்களுக்கு வர்த்தகக் கல்வி மூலம் எதிர்காலம் உண்டு.

இவ்வாறு யாழ்ப்பாணம் ஸ்ரீ மீனாட்சி வர்த்தகக் கல்லூரி முதலாவது ஆண்டு விழாவிற்கு கல்லூரி அதிபர் திரு. செ. சத்தியமூர்த்தி தலைமை வகித்துப் பேசுகையில் குறிப்பிட்டார்.

ஸ்ரீ மீனாட்சி வர்த்தகக் கல்லூரியில் நடைபெற்ற இவ்விழாவில் திரு. சத்தியமூர்த்தி தொடர்ந்து பேசுகையில் ''எமது நாட்டின் எதிர்காலம் மாணவர்கையில் உண்டு. மாணவர்கள் நாட்டுக்குச் செய்யவேண்டிய கடமைகளை சரிவரச் செய்துமுடிப்பதற்கு தனியார் கல்லூரிகளின் தேவையும் அவசியமாகும்.

பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட டாக்டர் வி. பரராஜசிங்கம் பேசுகையில் எமது நாட்டில் இப்போது வர்த்தகமும் விவசாயமும் இரு கண்களாக இருக்கின்றன. மாணவர்கள் பெற்றோரின் கட்டுப்பாட்டிற்குள் அடங்கி ஆசிரியரிலும் தாம் கல்வி பயிலும் பாடசாலையிலும் முழு நம்பிக்கை வைத்து கல்வி பயின்றால் அவர்களின் கல்வி வளரும் என்பதில் ஐயமில்லை.

தனியார் கல்லூரிகளை நடத்துபவர்களுக்கு பொது மக்கள் ஊக்கம் கொடுக்க வேண்டும். அப்போதுதான் மாணவ சமுதாயம் மேலும் வளரும் 18 மாணவருடன் ஆரம்பிக்கப்பட்ட ஸ்ரீ மீனாட்சி வர்தத்கக் கல்லூரி ஒருவருடத்திற்குள் 200க்கு மேற்பட்ட மாணவர்களைக் கொண்டிருப்பது ஆசிரியர்களின் திறனைக் காட்டுகிறது'' என்று கூறினார்.

இவ்விழாவில் கலாலயகோஷ்டியினரின் இன்னிசைவிருந்தும் நகைச்சுவை நாடக மன்றத்தாரின் உலகம் போகிற போக்கிலே என்னும் நாடகமும் திரு. செ. சத்தியமூர்த்தியின் கிரேக்க வீரன் என்னும் நாடகமும் இடம்பெற்றன. பிரம்மஸ்ரீ ச. ஈஸ்வரசர்மா செல்வன் மு. யோகராஜா செல்வன் இ. ஜெயராசா ஆகியோரும் உரையாற்றினர்.

(ந. நி)

வெள்ளைகடதாசியில்அல்ல

# 'கூட்ட நிகழ்ச்சிகளை புத்தகத்தில் பதியவேண்டும்'

## நகரசபைக்கு வரும் பிரேரணை

யாழ்ப்பாணம், செவ். இச் சபையின் சாதாரண விசேட கூட்டங்கள் நடைபெறும்போது கூட்ட நடவடிக்கைகள் குறிப்புகள் அனைத்தையும் உடனுக்குடன் புத்தகத்தில் பதியாதுவெள்ளைக் கடதாசியில் பதியப்பட்டு வருவதனால் வெள்ளைக்கடதாசியில் பதியும் முறையை நீக்கி புத்தகத்தில் உடனுக்குடன் பதிய வேண்டும் என்று கோரும் பிரேரணை இன்று நடைபெறும் சாகிகச்சேரி நகரசபை மாதாந்தக் கூட்டத்தில் ஆராயப்படவிருக்கிறது.

திரு. சு. கனகரத்தினம் தலைமையில் நடைபெறும் இக் கூட்டத்தில் கீழ்கண்ட பிரேரணைகளும் ஆராயப்படும்.

சாவகச்சேரி பஸ் நிலையத்தில் பழைய பஸ் நிலையத்தைத் திருத்தும் வேலை சபைத் தீர்மானத்திற்கு மாறாகவும் திருப்திகரமற்ற முறையிலும் வேலை நடைபெற்றிருக்கிறபடியால் இவ்வேலை செய்ததற்குரிய பணத்தை சபையின் அனுமதியின்றி கொடுக்கப்படாது.

பஸ்நிலைய ரோட்டு வேலை குறித்த கேள்விப்பத்திரத்தில் இடம்பெற்றுள்ளபகுதியின்படி செய்யப்படாததாலும், இவ் வேலை திருப்திகரமாக இல்லாதபடியாலும் இவ் வேலையை சபை பரிசீலனை செய்தே இவ்வேலைக்குரிய பணத்தை சபையின் அனுமதியின்றி ஒப்பந்தக்காரருக்கு கொடுக்கப்படாது.

மேற்கண்ட பிரேரணைகள் உட்பட பத்து பிரேரணைகளையும் 20 கேள்விகளையும் ரவுண் வட்டார அங்கத்தவர் திரு. ஸி. மயில்வாகனம் சமர்ப்பித்துள்ளார்.

நாடு முடிவில் நடைபெற்ற மாபெரும் கூட்டமொன்றில் பிரதமர் பேசினார்.

அவர்மேலும் பேசுகையில் 1952ம் ஆண்டிலிருந்த என... சேனநாயகாவின் உண்மையான மகன். தேசிய ஐக்கியத்துக்காகப் பாடுபட்டுழைத்த எனது தகப்பனாரின் கொள்கைகளையே யா... பின்பற்றி வருகின்றே... எதிர்க்கட்கியினரின் பிரசாரத்திற்காகப் பயந்து தேசிய ஐக்கியத்தைக் காப்பாற்றுவதை ஒருபோதும் கைவிட மாட்டேன் என்று கூறினார்.

அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது:- சமீப காலத்தில் என்னுடன் சிலர் சேர்ந்து 'நண்பர்கள்' போல் நடித்து, அரசாங்கத்தைப்பலப்படுத்த உதவுவது போல் கூறி, எனது அரசாங்கத்தை கவிழ்த்து, சர்வாதிகார ஆட்சியை அமைக்க முயன்றவர்களை அவதானித்து அவர்களைத் துரத்திவிட்டேன்.

எதிர்க்கட்சியினர்அரசாங்... னர். அதுவும் பயனளிக்...யாமல் போகவே தேசிய அரசாங்கத்திலுள்ள மந்திமார்களைக்குறை கூறி பிரசாரம் செய்ய ஆரம்பித்துள்ளார்கள். இப்படி பிரசாரம் செய்யப்படுபவர்களுள் கல்வி மந்திரி திரு. இரிய கொல்லையும் ஒருவராவர். திரு. இரிய கொல்லையைப் பற்றி என்னதான் எதிர்க்கட்சியினர் பேசினாலும் திரு இரிய கொல்லை பொதுத் தேர்தலில் குளியாப்பிட்டிய ஸ்தானத்தில் அமோக வெற்றியீட்டுவார் என்பது திண்ணம்.

இக் கூட்டத்தில் அரசாங்கத்தைச் சேர்ந்த மந்திரிமார் எம். பி. கள் சகலரும் கலந்து கொண்டனர்.

## வெளியேற உத்தரவு

அளவெட்டி, திங்கள் சீமந்து கூட்டுத்தாபனம் சுவீகரித்த காணிகளில் குடியிருப்பவர்கள் உடனடியாக வெளியேறி காணிகளை வெளியாக்கும்படி பிரசித்த மூலம் கூட்டுத்தாபனம் உத்தரவு பிறப்பித்துள்ளது.

காங்கேசன்துறை சீமெந்து தொழிற்சாலையை விஸ்தீரணம் செய்வதற்காக காங்கேசன்துறையை அடுத்த போயிட்டி கிராமத்தை சேர்ந்த குடியிருப்பாளர்களுக்குத்தான் மேற்கண்ட உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

விரிவுரையில்

# அண்ணாவை குறிப்பிட்டதாக வாரியார் வீட்டில்வன் செயல்

நெய்வேலி, பெப். 24 நெய்வேலியில் திருமுருக கிருபானந்தவாரியார் தங்கியிருந்த வீட்டை இரவு ஒரு வன்முறைக்கூட்டம் தாக்கியது. வாரியார் பூஜிக்கும் விக்கிரகங்களையும் சேதப்படுத்திவிட்டது.

''மனிதஉடல் நிலையற்றது. காலம் முடிந்து விட்டால், எவ்வளவு சிறந்த டாக்டர்களாயிருந்தாலும் சாகிறவனைப் பிழைக்க வைக்கமுடியாது'' என்று வாரியார் முதல்நாள் திருஞானசம்பந்தரைப் பற்றி விரிவுரையாற்றுகையில் சொன்ன சில வார்த்தைகளே இந்தச் சம்பவத்திற்குக் காரணம் என்று சொல்லப்படுகிறது.

அறிஞர் அண்ணாவைக் குறிப்பிட்டுத்தான் அவர் இப்படிச் சொன்னதாக கூட்டத்தில் ஒரு சாரார் கருதினார்களாம். இம்மாதிரி ஒரு தப்பபிப்பிராயம் ஏற்பட்டிருப்பதைக்கண்ட வாரியார், தான் எந்தக் குறிப்பிட்டசம்பவத்தையும் குறிப்பிடவில்லையென்றும், யாருடைய உணர்ச்சியாவது புண்பட்டிருந்தால் அதற்காக மன்னிப்புக்கோருவதாயும் கூறினார்.

அடுத்தநாள் சுகயீனம்காரணமாக வாரியார் உரையாற்றவில்லை. இரவு சுமார் 8-30 மணிக்கு 200 இளைஞர் அடங்கிய கூட்டமொன்று வாரியார் தங்கியிருந்த வீட்டைச் சூழ்ந்துகொண்டு ''அண்ணாவைப்பற்றிச் சொன்னதற்காக வருந்துகின்றேன்'' என்று மன்னிப்புக் கோரும் அறிக்கையொன்றில் கையெழுத்துப் போடச் செய்ததாகச் சொல்லப்படுகிறது.

பொலிசார் யோசனையின் பேரில் பெரியார் நெய்வேலியை விட்டுக் கிளம்பி விட்டார்.

இதுசம்பந்தமாகபொலிசார் வழக்குப்பதிவு செய்துள்ளனர்.

## ஆலயப் பிரவேச கோரிக்கை

மட்டுவில், திங்கள் வடமாகாணத்தில் மிகப் பிரபலமான மட்டுவில் பன்றித்தலைச்சி அம்மன்கோவிலைச் சகல மக்களுக்கும் சமாதான முறையில் திறந்துவிடுமாறு ஏற்கனவே ஆலய பரிபாலன சபைக்கும் தென்மராட்சிப் பகுதியிலுள்ள ஐம்பதுக்கு மேற்பட்ட பிரமுகர்களுக்கும் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. இவ்வேண்டுகோளை ஏற்றுச் சமாதான வழியில் கோவிலைத் திறந்துவிடத் தவறின் எதிர்வரும் பங்குனி உற்சவத்தின்போது ஆலயப்பிரவேசம் செய்வதெனத் தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கத்தின் தென்மராட்சிக் கிளைக் கூட்டத்தில் தீர்மானமொன்று நிறைவேற்றப்பட்டுள்ளது.

# 'இவர்களை பின்பற்றவும்'

யாழ்ப்பாணம், செவ். உரும்பராய் கற்பகப்பிள்ளையார் ஆலயத்தில் சிறுபான்மைத்தமிழ் மக்களும் உட்சென்று வழிபடுவதற்கு வழி செய்து கொடுத்த மேற்படி ஆலய நிர்வாகத்தவர்களுக்கும் உரும்பராய் வாழ் சைவப் பெருமக்களுக்கும் சிறுபான்மைத்தமிழர் ஐக்கிய முன்னணி தனது நன்றியைத் தெரிவித்து அறிக்கையொன்று வெளியிட்டுள்ளது.

இவ்வாலய நிர்வாகிகளின் செயலைப் பின்பற்றி சிறுபான்மைத் தமிழ்மக்கள் உட்சென்று வழிபட இதுவரையில் அனுமதி கொடாத ஆலயங்களின் நிவாகிகளும் பெருந்தன்மையுடன் முன்வந்து தமது ஆலயங்களைச் சிறுபான்மைமக்களுக்குத்திறந்துவிட்டு இப்பிரச்னையைச் சுமூகமாகத் தீர்த்து வைக்கும்படியும் அவ் அறிக்கையில் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

(ந. நி.)

## நகரசபைத் தேர்தல்கள் 24, 26-ல்

சென்னை, பெப். 25 அறிஞர் அண்ணாதுரையின் மறைவு காரணமாக பின் போடப் பட்டிருந்த தமிழ்நாடு நகரசபைத் தேர்தல்கள் வருகிற ஏப்ரல் மாதம் 24ம் 26ம் திகதிகளில் நடைபெறுமென அறிவிக்கப் பட்டுள்ளது.

10 நகரசகைளின் தேர்தல்கள் இந்தத் திகதிகளில் நடைபெற மாட்டாததால் அவற்றின் நிர்வாகம் விஷேஷ அதிகாரிகளின் கீழ் இயங்கும் எனவும் தெரிவிக்கப்பட்டது.

பதாகும் என்றும் தமிழக முதல்வர்திரு கருணாநிதிபதிலளிக்கையில் கூறினார். இது சம்பந்தமாக நடவடிக்கை தொடர்ந்து மேற்கொள்ளும்படி பம்பாய் அரசாங்கத்திற்கு கடிதம் அனுப்பியுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

## முதலிடம் வேண்டும்

குரும்பசிட்டி, திங்கள் 'வடமாகாணத்திற்கு பலாலி விமான நிலையம் மூலம் வருகைதரும் அமைச்சர்களையும் மற்றும் பிரமுகர்களையும் இக்கிராம சபை இதுவரை காலமும் முதலில் வரவேற்று வந்திருக்கின்றது அண்மையில் இம்முறை மாற்றம் செய்யப்பட்டுள்ளது. எமது கிராமசபை எல்லைக்குள் இருக்கும் விமானநிலையத்தில் கிராமசபைத் தலைவருக்கு முதலிடம் வழங்க வேண்டும்' என அரசினரைக் கோரும் தீர்மானத்தை மயிலிட்டிக் கிராமசபை நிறைவேற்றியுள்ளது.

அமரர் வன்னியசிங்கத்துக்கு சிலை அமைப்பது சம்பந்தமாக ஆராய நேற்று கீரிமலை நகுலேஸ்வரா சன சமூக நிலையத்தில் தமிழரசு வாலிப முன்னணி கீரிமலைக் கிளை கூடியது.

திரு. திருநாவுக்கரசு தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் காரசாரமான விவாதம் இடம் பெற்றது. இறுதியில் எங்கு சிலைஅமைப்பதுஎன்பதுபற்றி முடிவு செய்யப்படவில்லை.

கீரிமலை நகுலேஸ்வரா சனசமூக நிலையம் அண்ணா... டது.

வன்னியசிங்கத்தின் சிலை நிறுவுவதற்கான பணத்தை மக்களிடம் இருந்து வசூலிப்பதென இக் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது. மற்றும் பல பிரச்சனைகள் பற்றியும் இக் கூட்டத்தில் அராயப்பட்டது.

## சரித்திரத்தில் முதல் தடவை

கல்கிஸை, திங்கள் கல்கிஸை நகரசபை காரியதரிசி திரு. எல். ஆர். அழகரத்தினத்தைப் பொதுமக்கள் தொடர்புப் பத்திரிகை அதிகாரியாக நியமித்துள்ளது. இத்தகைய ஒரு நியமனம் உள்ளூராட்சி அமைச்சின் சரித்திரத்திலேயே முதல் தடவையாக நடந்த சம்பவமாகும்.

## ஒலிபெருக்கி தடை

குரும்பசிட்டி, திங்கள் உத்தரவுப்பத்திரம்இன்றி ஒலிபெருக்கியை அறிஞர் அண்ணா இரங்கற்கூட்டத்தில் பாவித்ததால் சுன்னாகம் பொலிஸார் திடீரென பிரவேசித்து ஒலிபெருக்கியை உபயோகிக்க தடை விதித்தனர். இச் சம்பவம் மல்லாகத்தில் நடைபெற்ற அண்ணாநினைவு தின விழாவில் இடம் பெற்றது.

பீகாரில் மந்திரிசபை அமைக்கப்படும் பொழுது தம்மையும் அழைக்க வேண்மென முக்கட்சிக் கூட்டணித்தலைவர் திரு, பாக்நாத் கவர்னருக்கு கடிதம் அனுப்பி வைத்துள்ளார்.

## வடபகுதி மருத்துவ மாதர்களின்

# சிங்களத்தேர்ச்சி நிபந்தனை பற்றி அரசாங்கம் தடுமாற்றம்

### உபசபாநாயகர் தகவல்

யாழ்ப்பாணம், செவ் ''வடக்குக் கிழக்கு மாகாணங்களில் வாழ்நாள் முழுதும் வேலைசெய்யும் தமிழ் ஊழியர்களுக்குச் சிங்களத் தேர்ச்சி எதற்காக வேண்டும் என்பதற்கு அரசாங்கம் பதில் சொல்ல முடியாமலிருக்கிறது. தமிழ் மக்கள் மத்தியில் பணியாற்றும் ஊழியர்களுக்குச் சிங்களத் தேர்ச்சி தேவையில்லை என்பதே எமது கருத்து. இங்கு கடமையாற்றும் மருத்துவத் தாதிகளுக்குச் சிங்களத் தேர்ச்சி அவசியமில்லையென்பதைச் சுகாதார மந்திரியிடம் கட்டாயம் கூறுவோம்.''

தேசீய அரசாங்க சுகாதாரச் சேவைத் தொழிலாளர் சங்க மருத்துவ மாதர்கள் மாநாட்டில் உப-சபாநாயகரும், உடுப்பிட்டி எம். பி. யுமான திரு. எம். சிவசிதம்பரம் பேசும்போது மேற்கண்டவாறு கூறினார்.

யாழ்ப்பாணத்தில் உள்ள சம்மேளனக் காரியாலயத்தில் நடந்த இம்மாநாட்டிற்குச் செல்வி லூசி தோமஸ் தலைமைதாங்கினார்.

உப-சபாநாயகர் திரு. எம். சிவசிதம்பரம் மேலும் கூறியதாவது:

தேசிய அரசாங்கம் அமைக்கப்பட்ட பின்னர் சுகாதார மந்திரியையும், நிரந்தரக் காரியதரிசியையிம் சந்தித்துச் சிறு சேவையாளருக்குச் சிங்களத் தேர்ச்சி தேவையில்லையென வாதாடினோம். இதன் பயனாகச் சிறு தொழிலாளருக்குச் சிங்களத் தேர்ச்சி அவசியமில்லையெனச் சுற்றுநிருபம் வந்தது. மந்திரி அன்று உங்களுக்கு வழங்கிய இந்தச் சலுகை, இன்று பதவி உயர்வு கொடுத்துப் பறிக்கப்பட்டுவிட்டது. சிறுதொழிலாளர்கள்என்ற நிலையிலிருந்து உங்களுக்குப் பதவி உயர்வு வழங்கியிருக்கிறார்கள். இதன் மூலம் உங்களுக்குச் சிங்களத் தேர்ச்சி அவசியமென்ற நிலையை உருவாக்கியிருக்கிறார்கள்.

விரைவில் நாங்கள் சுகாதார மந்திரியைச் சந்திப்போம். அப்போது உங்களுக்குச் சிங்களம் தேவையில்லையென வாதாடுவோம். அவர் அதற்கு இணங்க மறுத்தால், குறைந்தளவு தேர்ச்சி கொடுக்கும்படியும் சிங்களம் பயில வசதிசெய்து கொடுக்கும்படியும் கேட்போம். நீங்கள் சிங்களம் பயில வசதிசெய்துகொடுக்கும்வரை, நிர்ப்பந்திக்கக் கூடாதென்றும் கேட்டுக் கொள்வோம்.

சிங்கள மக்களுடன் நீங்கள் தொடர்புகொள்ள வேண்டியவர்களாயிருந்தால் நீங்கள் சிங்களம் படிக்கத்தான் வேண்டும். ஆனால் நீங்கள் வாழ்நாள் முழுதும் வடக்குக் கிழக்கு மாகாணங்களில்தான் கடமையாற்றப்போகிறீர்கள். அப்படியானால் சிங்களம் எதற்கு வேண்டும்?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## "நல்லாசிரியன் பிறப்பதில்லை; உருவாக்கப்படுகிறன்"

பருத்தித்துறை, திங்கள்
"ஒரு நல்ல சிறந்த ஆசிரியன் பிறப்பால் மட்டும் தோன்றுவதில்லை. அவன் உருவாக்கப்படலாம். வெறும் புத்தகக் கல்வியுடன் மட்டுமன்றி, சிந்தனைத் துறையிலும், செயல் துறையிலும் புதுமையை நாடும் பண்பு ஆசிரியனுக்கு வேண்டும் அவன் சமுதாய சிற்பியாகவும், வழிகாட்டியாகவும் விளங்க வேண்டும்."

இவ்வாறு நெல்லியடி மத்திய மகா வித்தியாலய ஆசிரியர் பேரவை திருவாளர்கள் எம். இராமக்கிருஷ்ணன், சீ. சந்திரசேகரி ஆகியோருக்களித்த பிரியாவிடை வைபவத்தில் மேற்படி கல்லூரி உப அதிபர் திரு. ஏ. சிவலிங்கம் கூறினர். தொடர்ந்து பேசிய அவர், பாடசாலை சிந்தனையோட்டத்தை வளர்க்கும் ஸ்தாபனங்களாக விளங்க வேண்டுமன்றி தடைக்கல்லாக இருக்கக் கூடாதென்றுர்.

திருவாளர்கள் ஏ. தாமோதரம்பிள்ளை, பண்டிதர் க. வீரகத்தி, எஸ். திருச்செல்வம், பாலேந்திரா ஆகியோரும் பேசினர்.

## வட பகுதியில் சுதந்திரக் கட்சி பர்வை

அளவெட்டி, ஞாயிறு
ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி வடபகுதியில் கிளைகளை ஆரம்பிப்பதில் தீவிரமாக ஈடுபட்டுள்ளதாகத் தெரிய வருகிறது. முன்னுள் தமிழரசு செனட்டராக இருந்து கட்சியை விட்டு விலகிய ஒருவரே இம்முயற்சியில் தீவிரமாக இறங்கியுள்ளதாகத் தெரிகிறது.

இவரின் முயற்சி தற்போது பருத்தித்துறைப் பகுதியில் கிளைகள் அமைக்க பயன்படுத்தப் படுவதாக சொல்லப்படுகிறது.

வட பகுதியில் உள்ள சகல தொகுதிகளிலும் தமது கட்சி வேட்பாளர்களை நிறுத்தும் முயற்சிகளையும் சுதந்திரக் கட்சியினர் மேற்கொண்டு வருவதாக அறியப்படுகிறது.

வடபகுதிக்கு

## பிரதமர் விஜயம் ஒத்திவைப்பு?

அளவெட்டி, திங்கள்
மார்ச் 30-ம் திகதி விவசாய சுற்றுலாவொன்றை மேற்கொண்டு வடபகுதிக்கு விஜயம் செய்யவிருந்த பிரதமர் டட்லி சேனநாயகாவின் வருகை பின்போடப்படலாம் என்று நம்பப்படுகிறது.

வடபகுதியில் உள்ள சில முக்கிய அதிகாரிகள் பிரதமருடன் தொடர்புகொண்டு விஜயத்தை ஒத்திவைக்கும்படி கேட்டுள்ளனராம்.

## பண்டத்தரிப்பு கொலை வழக்கு 26-ம தேதி விசாரணை

யாழ்ப்பாணம், செவ்.
பண்டத்தரிப்பு கொலை முயற்சி வழக்கு வட பகுதி அசைஸ் நீதிமன்றத்தில், இம்மாதம் 26-ம் தேதி மீண்டும் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படும்.

இவ் வழக்கு, வட பகுதி அசைஸ் நீதிமன்றத்தில் நீதியரசர் ஓ. எல். டி. கிரெஸ்டர் முன்னிலையில் விசாரணை செய்யப்பட்டு மறு விசாரணை செய்வதற்காக பின்போடப்பட்டது.

இவ் வழக்கில் 67 ம் ஆண்டு மே மாதம் 15-ம் தேதி பண்டத்தரிப்பில் முருகேசு அப்பையா என்பவர் நாராணி அம்பலத்தை கொலைசெய்ய முயற்சித்ததாக குற்றம் சாட்டப்பட்டிருந்தது.

எதிரி சார்பில் அட்வகேட் ஏ. அமிர்தலிங்கம் ஆஜரானுர். முடிக்குரிய தரப்பில் அட்வகேட் ரஞ்சித் குணதிலகா ஆஜரானுர்.

அசைஸ் விசாரணை மீண்டும் இம்மாதம் 25-ம் தேதி காலை ஆரம்பமாகும்.

## பிரயாணிகள் அதிருப்தி

யாழ்ப்பாணம், திங்கள்
கோண்டாவிலிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு நடைபெறும் இ. போ. ச, போக்குவரத்துச் சேவை சீரற்று இருப்பதால் இப்பகுதி பிரயாணிகள் மிகவும் சிரமத்துக்குள்ளாவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதனுல் மாணவர்கள் பாடசாலைக்கு தாமதமாகவே செல்லமுடிகிறதாம்.




# செய்திச் சுருக்கம்

### பட்டதாரி மாணவர் கோரிக்கை

பிரதமர் தமது அறிக்கையை வாபஸ் பெறவேண்டும் எனவும் ராணுவ கெடுபிடியின்போது தங்களுக்கேற்பட்ட பொருள்நஷ்டத்திற்கு அதிகாரிகள் நஷ்டஈடு வழங்கவேண்டுமென்றும் இலங்கைப் பல்கலைக் கழகப் பட்டதாரி மாணவர்கள் கூட்டத்தில் மாணவர்கள் கேட்டுக்கொண்டனர்.

0 0 0

### திருட்டு

மாவனல்லையிலுள்ள புராதன ராஜவிகாரையில் திருடர்கள் நுழைந்து புத்தர் சிலை, பெருந்தொகையான பணத்தைக் கொண்ட காணிக்கைப்பெட்டி, ஆகிய வற்றை திருடிச் சென்றுள்ளனர்.

0 0 0

### நெருப்புக் காய்ச்சல்

இருகலையில் நெருப்புக் காயச்சல் தீவிரமாகப் பரவியுள்ளது. சுகாதாரப் பகுதியினர் அப்பகுதிக் கடை வீதிகளில் தடுப்பு மருந்துகள் அடித்தும் மக்களுக்கு தடுப்பு ஊசி ஏற்றுவதிலும் தீவிர கவனம் செலுத்தி வருகின்றனர். சுகாதாரப் பகுதியினரின் ஆலோசனைப்படி இருகலைக் கடை வீதியில் உள்ள ஹோட்டல்களும் சந்தைகளும் மூடப்பட்டன.

0 0 0

### விநியோகம் இல்லை

அடுத்த வருடத்திலிருந்து கலால் இலாகாவினுல் மொலாசெஸ் சாராயம் விநியோகம் செய்யப்படமாட்டாது.

0 0 0

### பழுது பார்க்கும் தொழிற்சாலை

கொழும்பு முகத்துவாரம், மன்னுர், மாத்தறை ஆகிய இடங்களில் உள்ள மூன்று மீன்பிடித் துறைமுகத்துக்குச் சமீபத்தில் மீன்பிடி இயந்திரங்கள் பழுதுபார்க்கும் தொழிற்சாலைகள் நிறுவ மீன்பிடிக் கைத்தொழில் அமைச்சு முடிவு செய்துள்ளது.

0 0 0

### பெண்களுக்கும் இடம்

சமாதான சபைகளுக்கு வரும் பிரச்னைகளில் பல பெண்களும் சம்பந்தப்பட்டிருப்பதால் சமாதானசபையில் பெண்களுக்கும் இடம் பெறவேண்டும் என திரு. கே. பி. இராஜசூரியாபெரல் தெனியாவில் நடைபெற்ற கூட்டத்தில் பேசும்போது குறிப்பிட்டார்.

சாவகச்சேரி நகரசபை

## அண்ணுவுக்கு அனுதாபம் இல்லை; கூட்டம் ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், திங்கள்
கூட்ட அறிக்கைகள் உரிய நேரத்துக்கு அங்கத்தவர்களுக்கு அனுப்பப் படாததால், நேற்று நடந்த சாவகச்சேரி நகர சபை கூட்டம் ஒத்திவைக்கப்பட்டது. சபைத் தீர்மானத்தின்படி கூட்ட அறிக்கை 10 நாட்களுக்குமுன் அங்கத்தவர்களுக்கு அனுப்பப் படாததால், கூட்டத்தை இம்மாதம் 25-ம் தேதிக்கு ஒத்திவைக்க வேண்டுமென்று திரு. வே. கனகசபை கொண்டுவந்த தீர்மானம், ஏகமனதாக நிறைவேறியதைத் தொடர்ந்து, தலைவர் கூட்டத்தை ஒத்திவைத்தார்.

சாவகச்சேரி நகர சபைக் கூட்டம் தலைவர் திரு. சு. கனகரத்தினம் தலைமையில் நேற்றுக் காலை ஆரம்பமானது, கூட்ட அறிக்கை தங்களுக்கு உரிய நேரத்தில்

இக்கூட்டத்தில் அறிஞர் அண்ணுவிற்கு அனுதாபம் தெரிவிக்கவேண்டுமென தலைவர் தெரிவித்தார். அறிஞர் அண்ணுவிற்கு அவசியம் அனுதாபத் தீர்மானம்நிறைவேற்றவேண்டும் என்று திரு. எஸ். பாலசுப்பிரமணியம் கூறினர். ஆனுல் கூட்டம் ஒத்திவைக்கப்பட்டதால், அண்ணுவிற்கு அனுதாபம் தெரிவிக்கப்படவில்லை.

## பதிவுக் கந்தோர்

சுழிபுரம், திங்கள்
சங்கானை மேற்குப் பதிவுகாரர் திரு. அ. சின்னையா சங்கானை அரசினர் வைத்தியசாலையிலுள்ள அலுவலகத்தில் மாதம் நான்கு தினங்களுக்குப் பதிவு கந்தோரை நடாத்த வடபகுதி பெரும்பகுதி அதிபரால் உத்தரவு கொடுக்கப்பட்டுள்ளது.

## கட்டுபெத்தை—அரியாலை ஆட்டத்தில் எவருக்கும் வெற்றியில்லை

யாழ்ப்பாணம், செவ்.
யாழ்ப்பாணம் அரியாலை மத்திய விளையாட்டுக் கழகத்திற்கும், கட்டுபெத்தை தொழில் நுட்பக் கல்லூரிக்குமிடையில் கொழும்பு 'பிறின்ஸ் ஒவ்வேல்ஸ்' மைதானத்தில் நடைபெற்ற கிரிக்கெட் போட்டி வெற்றி தோல்வியின்றி முடிவுற்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய கட்டுபெத்த கோஷ்டி 1 விக்கெட் நஷ்டத்துக்கு 92 ஓட்டங்களை எடுத்தபோதும் இதன் பின் இக் கோஷ்டியின் விக்கெட்டுகளை, அரியாலைக் கோஷ்டியின் பந்து வீச்சு வீரர்களான இம்மானுவேலும், லூயிசும் மிகவும் திறமையாக பந்து வீசிஅடுத்தடுத்து கைப்பற்றினர். கட்டுபெத்த கோஷ்டி சகல விக்கெட்டுகளையும் இழந்து மொத்தம் 110 ஓட்டங்களைப் பெற்றது இதில் எஸ். பெரேரா 39 ஓட்டங்களையும் எஸ். சிவகுமார் 45 ஓட்டங்களையும் பெற்றனர். இம்மனுவேல், லூயிஸ் முறையே 4, 4, விக்கெட்டுகளைக் கைப்பற்றினர்.

அரியாலை மத்திய விளையாட்டுக் கழகம் தனது முதல் இன்னிங்ஸில் மொத்தம் 95 ஓட்டங்களை மாத்திரமே பெற்றது. சிவபாலன் 20 ஓட்டங்களையும், லூயிஸ் 20 ஓட்டங்களையும் பெற்றனர். சில்வா 5 விக்கெட்டுகளைக் கைப்பற்றினர்.

கட்டுப்பெத்த கோஷ்டி 2-வது இன்னிஸிங்கில் 8 விக்கெட் நஷ்டத்துக்கு 59 ஓட்டங்களைப் பெற்று ஆட்டத்தை நிறுத்திக்கொண்டது. இதில் லூயிஸ் 6 விக்கெட்டுகளை வீழ்த்தினுர்.

அரியாலைக் கோஷ்டி 2-வது இன்னிங்ஸில், 13 நிமிடங்களில் 74 ஓட்டங்களை எடுக்க வேண்டியிருந்தது. இக் கோஷ்டியின் காப்டன் இம்மானுவேலும், பாலகணேசனும் மிக வேகமாக துடுப்பெடுத்தாடி விக்கெட் நஷ்டமின்றி 40 ஓட்டங்களைப் பெற்றனர். இம்மானுவேல் ஒரு ஓவரில் அடுத்தடுத்து 5 பவுண்றியை அடித்து ரசிகர்களிடம் சபாஷ் பெற்றுர்.

நேரமின்மையால் ஆட்டம் எவருக்கும் வெற்றி தோல்வியின்றி முடிவுற்றது.
(தே. நி.)

## இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

### திங்கள் 25—2—69

(செய்திகள் காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00.)

344 மீ. அன் 61 மீ.

காலை 6-30 நாதாஞ்சலி, 6-35 சைவநற்சிந்தனை, 6-40 இஸ்லாமியநற்சிந்தனை, 6-45 துதிப்பாடல்கள், 7-30 குரல்வகை, 8-00 நிலையஒலிப்பதிவுகள், 8-15 இஸ்லாமியகீதங்கள்.

344 மீ. அன் 49 மீ.

பகல் 12-00 சித்திரகானம், 1-00 கதம்ப இசை.

344 மீ. அன் 61 மீ.

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-30 வளரும்பயிர்.

இரவு 6-15 சங்கீதபாராயணம் மணிபாகவதர், 6-30 விமர்சனம், 6-45 பாவளம் 7-00 கிராமசஞ்சிகை, 7-30 குறுக்கெழுத்து, 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-30 செய்திச்சுருள், 9-45 நாதஸ்வரம் எம். பஞ்சாபிகேசன்.

## பிறப்பு இறப்பு பதிவாளர்கள்

பம்பலப்பிட்டி, திங்கள்
உள்நாட்டமைச்சு வெகு விரைவில் பிறப்பு இறப்பு பதிவாளர்களின் வெற்றிடங்களை நிரப்ப நடவடிக்கைகள் மேற்கொள்ளவிருக்கின்றது. பல கிராமப் புறங்களில் பிறப்பு இறப்பு பதிவாளர்கள் இல்லாததனுல் அங்குள்ள மக்கள் பிறப்பு இறப்புகளைப் பதிவதற்கு மிகவும் கஷ்டப்படுகிறுர்கள். இத்தகைய வசதியின்மையைப் போக்கவே அமைச்சு இந்நடவடிக்கையை மேற்கொள்ளவிருக்கிறது.

## கேள்வி விளம்பரம்

500 கலன் தண்ணீர் கொள்ளக் கூடிய தாங்கி மின்தறி நெசவாலை வளவிற்குள் நிறுவுவதற்கு கேள்வி விண்ணப்பங்கள் 4-3-69-ந் திகதி பிற்பகல் 3 மணி வரை ஏற்றுக் கொள்ளப்படும். விண்ணப்பப் பத்திரம் காரியாலயத்தில் பெற்றுக் கொள்ளலாம். விண்ணப்பங்கள் அரக்கு முத்திரையிடப்பட்டு தலைவர் வலி. மேற்கு ப. நோ. கூ. சமாஜம், சங்கானை என்ற விலாசத்திற்கு

## வரிவிளம்பரம்

### தேவை

ஒப்பரேட்டர்கள்:
நல்ல அனுபவமுள்ள சினிமா ஒப்பரேட்டர்கள் தேவை. ராஜா தியேட்டர், யாழ்ப்பாணம். 535

அச்சுத்தொழிலாளர்:
அனுபவமுள்ள கொம்போசிட்டர்கள், மெஷீன் மைன்டர்கள் மற்றும் அச்சுத் தொழில் பழகுவதில் ஆர்வமுள்ளவர்கள் தேவை. நற்சாட்சிப் பத்திரங்களுடன் விண்ணப்பிக்கவும். தமிழ்நாடு அச்சகம்&புத்தகசாலை, வட்டுக்கோட்டை. 534

அலுமினியம் தொழிற்சாலையில் வேலைபார்த்து அனுபவமுள்ள ஸ்பின்னர்களும் பொலிசர்களும் தேவை. முழுவிபரங்களுடன் கீழ்க்காணும் விலாசத்திற்கு விண்ணப்பிக்கவும். யாழ் உலோகத் தொழிற்சாலை, 250-254, K. K. S. ரோட், யாழ்ப்பாணம். 696

மூன்று மாதம் வரைக்கும் ஒரு கர்ப்பிணியைப் பராமரிப்பதற்கு அனுபவமுள்ள பெண் தேவை. விபரங்கட்கு விண்ணப்பிக்கவும். விளம்பர இல. 698 C/o 'ஈழநாடு' யாழ்ப்பாணம். 698

பணியாள்:
குழந்தைகளைப் பராமரிக்கவும், சமைப்பதற்கும் அனுபவமுள்ள பணியாள் உடன் தேவை. தகுந்த சம்பளம் கொடுக்கப்படும். நேரில் வரவும். 25, விதானையார் ரோட்டு, சுண்டிக்குளி. 532

### விற்பனைக்கு

கடை:
கஸ்தூரியார் வீதி, 73/1, இலக்கமுள்ள கடை விற்பனைக்குண்டு. வி. கந்தையா, 74/1, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். 695

காணி:
நெடுங்குளம் ரோட்டுக் கருகாமையிலுள்ள 31-ம் இலக்க 5 பரப்புக்காணி (வீடு கட்டக் கூடியது) விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு: க. செல்லத்துரை, 31, நெடுங்குளம் வீதி, கொழும்புத்துறை கிழக்கு, யாழ்ப்பாணம். 533

காணி:
நாலு பரப்பு ஆறு குளிகளைக்கொண்ட கட்டிடக் காணித்துண்டு பருத்தித்துறை ரவுணில் விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்க திருமதி சின்னையா, உப

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





ஷெல் ரசாயனப் பொருட்கள் பாவித்து அதிக உணவு பயிரிடுக

ஷெல் ரசாயனப் பொருட்கள் — SHELL

ரசாயனப்பொருளை நினையுங்கள், ஷெல்லை நினையுங்கள 'அலறெக்ஸ்', 'டீல்றெக்ஸ்' 20, 'டீல்றெக்ஸ் எக்ஸ்ட்ரா', 'ஆகொடீன்', 'என்றெக்ஸ்' 20, 'பிட்றின்', 'மலதியன்', 'சுமத்தியன்', ஷெல் களைப்புற்கொல்லி 'எம் 50', 'ஸ்டாம்' எப - 34, 'இறமலின்', ஷெல் பீ. எச். சி 10% தூள் இவை ஷெல் ஸ்தாபனத்தாரின் விரிவான விவசாய ரசாயனப் பொருட்களில் சில மாத்திரமே.

எப்பயிர்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை
அப்பயிர்க்கு 'ஷெல்' பூச்சி நாசினி பயனை பாவிக்காரெனில்
AGENTS
# றேயல் டிஸ்பென்ஸறி
PHONE 397 JAFFNA


தொடர்ந்து, தலைவர் கூட்டத்தை ஒத்திவைத்தார்.

சாவகச்சேரி நகர சபைக் கூட்டம் தலைவர் திரு. சு. கனகரத்தினம் தலைமையில் நேற்றுக் காலை ஆரம்பமான போது, கூட்ட அறிக்கை தங்களுக்கு உரிய நேரத்தில் கிடைக்க வில்லையென்று சில அங்கத்தவர்கள் புகார் செய்தனர்.

கூட்ட அறிக்கை முழுவதும் பிழை யென்றும், உண்மைக்கு மாறாக இருப்பதாகவும், இதனைப் பரிசீலனை செய்ய நேரம் போதாதென்றும் திரு. கே மயில்வாகனம் கூறினார். 10 நாட்களுக்கு முன் கூட்ட அறிக்கை அங்கத்தவர்களுக்கு அனுப்ப வேண்டுமென்ற சபையின் தீர்மானம் அமுல் செய்யப்படவில்லை யென்றும் அவர் தெரிவித்தார்.

இம்மாதம் 8-ம் தேதி நடந்த கூட்ட அறிக்கை 21-ம் தேதியே தனக்குக் கிடைத்ததாகவும் காரியதரிசி கடமையைச் சரிவரச் செய்ய, தலைவர் பார்த்துக்கொள்ள வேண்டுமென்றும் திரு. எஸ். பாலசுப்பிரமணியம் கூறினார்.

## கல்வி அமைச்சருக்கு முஸ்லிம் அங்கத்தவர் கோரிக்கை

யாழ்ப்பாணம், செவ்.

'இலங்கைவாழ் முஸ்லிம் மாணவர்களுக்கென சேர்க்கப்பட்ட ஜி. சி. ஈ. சாதாரண இலக்கிய பாடத் திட்டத்தில் ஆ பிரிவை மூடுவதற்குகல்வி இலாகா எடுத்து வரும் நடவடிக்கை எமது கலாச்சாரத்திற்கு முழுதும் முரணானது. முஸ்லிம் மாணவர்கள் தங்கள் கலாச்சாரத்தைப் பாதுகாக்கும் இலக்கிய 'ஆ' பாடத் திட்டத்தைப் பாதுகாக்க நடவடிக்கை எடுக்கவும்'

இவ்வாறு கூறும் மகஜரொன்றை மாநகர உறுப்பினர் திரு, எம். ஜி. பசீர் கல்விஅமைச்சர் திரு ஐ. எம் ஆர். ஏ, இரியகொல்லைக்கு அனுப்பி வைத்துள்ளார்.

## மானிப்பாய் கி, ச. அங்கத்தவர்கோருவர்

யாழ்ப்பாணம். செவ்.

''யாழ்ப்பாணத்தில் பிரசித்திபெற்ற மாணிப்பாய் மருதடி விநாயகர் கோவில் தேர், தீர்த்த திருவிழாவை இலங்கை வானொலியில் அஞ்சல் செய்வதற்கு வேண்டிய ஒழுங்கு செய்யவேண்டும்'' எனக் கோரும்பிரேரணையை மானிப்பாய் கிராம சபை முதலாம் வட்டார அங்கத்தவர், கொண்டுவருவதற்கு முன்னறிவித்தல் கொடுத்துள்ளார் (ந. நி.)

சங்கானை அரசின் வைத்தியசாலையிலுள்ள அலுவலகத்தில் மாதம் நான்கு தினங்களுக்குப் பதிவு கந்தோரை நடாத்த வடபகுதி பெரும்பகுதி அதிபரால் உத்தரவு கொடுக்கப்பட்டுள்ளது.

## இன்றைய பலன்

செவ்வாய்க்கிழமை
(25-2-69)
மாசி மாதம், 14 உ

திதி- நவமி இரவு 3-15 மேல் தசமி.

நட்சத்திரம்- ரோகணி பகல் 10-25 மேல் மிருகசீரிடம்.

ராகுகாலம் 3-30 - 5-00.

சுபநேரம்- 11-00— 12-30.

இன்று பிறந்தவர்களுக்கு- ஏமாற்றங்களுக்கு மத்தியில் சிலமுன்னேற்றங்களும் தோன்றலாம். உங்கள் அவசரப்போக்கால் சில அருமையான சந்தர்ப்பங்களை இழக்க நேரிடலாம். கோபத்தை அடக்கிக் கொண்டால் குடும்பத்தில் அமைதி தவழும். மின்சாரத்துறையில் கடமை புரிவோர் மிகவும் நிதானமாக இருக்க வேண்டும்.

மேஷம்- மந்தநிலை மறைக்குணம்.
ரிஷபம்- புத்திரர் புகழ் புதிய உற்சாகம்,
மிதுனம்- குடும்பநலன் குதூகல மிகுதி.
கடகம்- சகோதரநலன் சஞ்சல நிவர்த்தி.
சிம்மம்- வாகனவிருத்தி வாழ்விலும் திருப்தி.
கன்னி- இதயக்களிப்பு இணைப்பும் இறுகும்,
துலாம்- ஆயுதபயம் அவசரம் வேண்டாம்.
விருச்சிகம்- சத்தான வாழ்வு முத்தான நிகழ்ச்சி.
தனுசு- காதல் களத்தில் மோதலைத்தவிர்.
மகரம்- தந்தையுடன் பிணக்கு சமாதானம் வேண்டும்.
கும்பம்- புத்தாடை அணிதல். புதிய சந்திப்பு.
மீனம்- மக்கள் நலன் மனதிற்கும் அமைதி.

— சோதிடக்கலாநிதி —
திருமலை வேலுப்பிள்ளை

யணம் மணிபாகவதர், 6-30 விமர்சனம், 6-45 பாவளம் 7-00 கிராமசஞ்சிகை, 7-30 குறுக்கெழுத்து, 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-30 செய்திச்சுருள், 9-45 நாதஸ்வரம் எம். பஞ்சாபிகேசன்.


43வது தினம்!
ராஜா
(யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
10-30, 2-30, 6-30, 9-45
எம். ஜி. ஆர்-ஜெயலலிதா மற்றும் பலர் நடித்த
ஒளி விளக்கு
(ஈஸ்ட்மென் கலர்)
(எஸ். ரி. ஆர். வெளியீடு)

வின்ஸர்
(யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
எம். ஜி. ஆர் - ஜெயலலிதா நடித்த
குடியிருந்த கோயில்

ராணி
(யாழ்ப்பாணம்)
தினசரி 3 காட்சிகள்
சிவாஜி — சாவித்திரி நடித்த
அன்னையின் ஆணை

இணுவில்
ஸ்ரீ காலிங்கன்
தினசரி 6-30, 9-30
பிரிபோயா, போயா 2-30
ஜெய்சங்கர் விஜயா நடித்த
பட்டணத்தில் பூதம்

மானிப்பாய்
வெஸ்லி சினிமா
தினசரி 6-30, 9-30 மணி
பிரிபோயா, போயா 2-30 மணி
அசோகன் - K. R. விஜயா நடித்த
காட்டுராணி

MANOHARA
JAFFNA
Daily at 4-45, 7-00, & 9-45 p. m.
Pre Poya Poya 10-30 a. m.
Long Jeffries - Joose Greci
in
ASSIGNMENT LOST FORMULA

NOW SHOWING
REGAL at Jaffna
Daily at 10-00 a. m, 4-45, 7-00, & 9-45 p. m.
Franco Nero - Elisa Montes
in
TEXAS ADDIOS


கொள்ளப்படும். விண்ணப்பப் பத்திரம் காரியாலயத்தில் பெற்றுக் கொள்ளலாம். விண்ணப்பங்கள் அரக்கு முத்திரையிடப்பட்டு தலைவர் வலி. மேற்கு ப. நோ. கூ. சமாஜம், சங்கானை என்ற விலாசத்திற்கு அனுப்பப்படல் வேண்டும்.
1198

காணி:
நாலு பரப்பு ஆறு குளிகளைக்கொண்ட கட்டிடக் காணித்துண்டு பருத்தித்துறை ரவுணில் விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்க திருமதி சின்னையா, உபதபாற்கந்தோர், துன்னாலை
693

## அறிவித்தல்

சுழிபுரம் பத்திரகாளி அம்மன்கோவில் வருடாந்த வேள்வித் திருவிழா வருகிற மார்ச் மாதம் 18-3-69 செவ்வாய்க்கிழமை ஆரம்பமாகி, 25-3-69 பொங்கல் பூசையுடன் முடிவடையும். இம்முறை ஆடு, கோழிகள் பலியிடப்படமாட்டாது என்பதை அடியார்களுக்குத் தெரிவிக்கின்றோம். அடியார்கள் தமது நேர்த்திக்கடன்களைக் கோவில் பூசகரிடம் சமர்ப்பித்து அருளைப் பெறுமாறு வேண்டுகின்றோம்.

இங்ஙனம்
ஆ. அன்னப்பிள்ளை
பொ. பொன்னம்மா
கோவில் முகாமையாளர்
793


கிங்ஸ்லி பிளாஸா

வெம்பிளி
(கண்டி)
ஸ்ரீகிருஷ்ணா
(திருமலை)
வெலிங்டன்
(யாழ்ப்பாணம்)
மற்றும்
சினிமாஸ்திரைகளில்

சிவாஜிகணேசன்
கே. ஆர். விஜயா
முத்துராமன்,
எல். விஜயலக்ஷ்மி,
நாகேஷ், குமாரிசச்சு
இன்னும் பலர் நடித்த
ஸ்ரீதரின் மகோன்னத
ஈஸ்ட்மென்
கலர்ப் படைப்பு

ஊட்டிவரை உறவு
இசை: விஸ்வநாதன் பாடல்கள்: கவிஞர்கண்ணதாசன்

அத்துடன் காண்பிக்கப்படுகிறது யாழ் வெலிங்டன் திரையில்

மு. கருணாநிதியின் விமர்சனத்துடன்
S S. வாசன்
அவர்களால்
ஈஸ்மன்கலரில்படமாக்கப்பட்டு சென்னையில் நடைபெற்ற
இரண்டாவது அனைத்துலக தமிழ் ஆராய்ச்சிமகாநாட்டு கோலாகல காட்சியையும்

மற்றும்
மக்கள் திலகம் எம். ஜி. ஆர். - அறிஞர் அண்ணா ஆகியோர் இம்மகாநாட்டில் சொற்பொழிவாற்றுவதையும் பார்க்கலாம்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'அமைதியைத் தேடி வந்திருக்கிறேன்'

## பெல்ஜியம் தலைநகரில் அமெரிக்க அதிபர்

பிரஸல்ஸ், பெப். 24

எட்டு நாட்கள் ஐரோப்பிய நாடுகளில் சுற்றுப்பிரயாணம் செய்வதற்காக அமெரிக்க அதிபர் திரு. ரிச்சார்ட் நிக்ஸன் இன்று பெல்ஜியத்தின் தலைநகரான பிரஸல்ஸ் வந்துசேர்ந்தார்.

திரு. நிக்ஸன் பிரஸல்ஸ் வந்துசேர்ந்த உடனேயே பெல்ஜியத் தலைவர்களுடன் மேற்கைரோப்பிய பிரச்சினைகள் பற்றி ஆலோசனைகள் நடத்த ஆரம்பித்தார்.

திரு. நிக்ஸன் பிரஸல்ஸ் விமானநிலையத்தில் வந்திறங்கியபோது பெல்ஜிய மன்னர் அவரை வரவேற்றார்.

'அமைதியைத் தேடியும் அமெரிக்க நேசநாடுகளுடன் ஆலோசனைகள் நடத்தி அவர்களின் கருத்துக்களை அறியவுமே வந்திருக்கிறேன்' என்று அதிபர் நிக்ஸன் விமானநிலையத்தில் கூறினார்.

அதன் பின்னர் மன்னர் மாளிகையில் பெல்ஜிய பிரதமருடனும் வெளிநாட்டு அமைச்சருடனும் திரு. நிக்ஸன் ஆலோசனைகள் நடத்த ஆரம்பித்தார்.

மேற்கு ஐரோப்பிய நாடுகளுக்கிடையில் ஒற்றுமையை ஏற்படுத்துவது பற்றியும் உறவுகளைப் பலப்படுத்திக்கொள்வது பற்றியும் அவர்கள் ஆலோசனைகள் நடத்துவார்கள் என்று தெரிகின்றது.

இந்தப் பேச்சுவார்த்தைகளின் பின்னர் இன்று மாலையில் திரு. நிக்ஸன் லண்டனுக்குப் புறப்படுவார்.

மேற்கு ஐரோப்பிய நாடுகளுக்கிடையில் ஒற்றுமையை ஏற்படுத்த திரு. நிக்ஸன் கிளம்பியுள்ள இந்தச் சந்தர்ப்பத்தில் பிரிட்டனுக்கும் பிரான்சுக்குமிடையில் கருத்துவேற்றுமைகள் அதிகரித்திருப்பது அவருக்கு சங்கடத்தை ஏற்படுத்தியிருப்பதாக நோக்கர்கள் கருதுகின்றனர்.

லண்டனுக்குப் புறப்படுவதற்கு முன்னர் திரு. நிக்ஸன் பிரஸல்ஸிலுள்ள 'நேட்டோ' (வட அட்லாண்டிக் ராணுவ ஒப்பந்த நாடுகள்) தலைமையகத்துக்கு விஜயம் செய்வார்.

லண்டனுக்கு விஜயம் செய்த பின்னர் மேற்கு பெர்லினுக்கும் அதன் பின்னர் ரோம், மற்றும் பாரிஸ் போன்ற தலைநகர்களுக்கும் நிக்ஸன் போவார்.



### முன்னாள் மன்னர் காலமானார்

மெக்கா, பெப். 24

சவூதி அரேபியாவின் முன்னாள் மன்னர் சவூத் நேற்று மாரடைப்பால் மரணமானார். இவர் தமது தந்தை காலமானவுடன் 1953 சவூதி அரேபியாவுக்கு மன்னரானார். 1954-ல் இவர் நாடு கடத்தப்பட்டு இவருடைய சகோதரரான பெய்ஸல் மன்னராகப் பதவிப் பிரமாணம் செய்யப்பட்டார்.

### இவருக்கு



## அயூப்பை சந்திக்க முஜிபுரகுமான் ஆயத்தம்

### டாக்கா குழப்பத்தில் 5 பேருக்கு காயம்

ராவல்பிண்டி, பெ.24

நேற்று டாக்காவில் பொலிசார்மீது கற்களைவீசி குழப்பம் செய்த மக்கள் கும்பல்மீது பொலிசார்துப்பாக்கிப்பிரயோகம் செய்தபொழுது 5பேர்காயமடைந்தார்கள். சிறையிலிருந்து விடுதலையாகியுள்ள கிழக்குப் பாகிஸ்தான் அவாமிக் கட்சியின் தலைவர் சேக்முஜிபுரகுமான் ஒரு கூட்டத்தில் பேசியபின்னர் இந்தக் குழப்பம் ஆரம்பமாகியது.

ராவல்பிண்டியில் அயூப்கானுடன் தாம் நடத்தப்போகும் பேச்சுவார்த்தைகளில் கிழக்கு-மேற்கு பாகிஸ்தான் மக்களின் கோரிக்கைகளைத் தாம் வற்புறுத்தப் போவதாக அவர் கூறினார்.

வயதுவந்த அனைவருக்கும் வாக்குரிமையளித்து அதன் மூலம் தெரிவு செய்யப்படும் மக்கள் ஆட்சியையேதாம் வற்புறுத்தப் போவதாக சேக் முஜிபுர் ரகுமான் கூறினார்.

டாக்கா சதி வழக்கில்குற்றஞ் சாட்டப்பட்டிருந்த சேக்முஜிபுரகுமான் இரண்டு தினங்களுக்கு முன் விடுதலை செய்யப்பட்டார். அவர் மீதும் அவரது சகாக்கள் மீதும் குற்றஞ்சாட்டி தாக்கல் செய்யப்பட்டிருந்த சதி வழக்கும் வாபஸ் பெறப்பட்டுள்ளது.

சேக்முஜிபுரகுமான் இன்று டாக்காவிலிருந்து ராவல்பிண்டிக்கு புறப்படவிருக்கின்றார். ராவல்பிண்டியில் அதிபர் அயூப்கானுடன் பேச்சுக்கள் நடத்துவதற்காக 8பேர் அடங்கிய ஒரு குழுவுடன் அவர் ராவல் பிண்டிக்கு வருகிறார்.

சேக் முஜிபுரகுமான் ராவல்பிண்டி வந்தவுடன் அவருடன் ஆலோசனைகள் நடத்துவதற்கு எட்டுஅரசியல் கட்சிகளின் ஜனநாயக செயல் கமிட்டி ஏற்பாடுகள் செய்து வருகின்றது.

மக்களை அமைதியாகஇருக்கும்படி சேக் முஜிபுரகுமான் வேண்டுகோள் விடுத்திருக்கிறார்.

## கி. பாக். பிரமுகர் அடுத்த ஜனாதிபதி?

### பூட்டோ விருப்பம்

பாகிஸ்தானின் அடுத்த ஜனாதிபதியாக ஒரு கிழக்குப் பாகிஸ்தானியரே வரவேண்டும் என்று மக்கள்லீக் கட்சியின் தலைவர் பூட்டோ டாக்காவில் கூறியிருக்கிறார். இந்தப் பதவிக்குத் தகுதியான ஒருவரைத் தெரிவு செய்வதில் எதிர்க் கட்சிகளுக்கிடையில் கருத்து ஒற்றுமை ஏற்பட்டால் ஜனாதி[illegible] பதவிக்குத் தாம் போட்டியிடாமல் ஒதுங்கிக் கொள்ள தயாராக இருப்பதாக திரு பூட்டோ அறிவித்திருக்கிறார்.

கிழக்குப் பாகிஸ்தான் மக்கள் தெரிவிக்கும் [illegible]றைபாடுகள் யாவும் உ[illegible]மையானவைதான் என்று லாகூரில் எயார் மார்வுல் அஸ்ஹாகானும் அறிவித்திருக்கிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாக்காளர் பட்டியலில் ஜாதியின் பெயர்

### தமிழ் நாடு சட்டசபையில் நடந்த சூடான விவாதம்

சென்னை, பெப். 24

கவர்னர் உரைமீது தமிழ் நாடு [illegible] இம்சட்டசபையில் [illegible] குற்றம் சாட்டியபோது, முதலமைச்சர் குறுக்கிட்டு, ''ஜாதியை எல்லாம் கடந்து

## ஆயிரம் பேர் பலி

சைகோன், பெப் 22

கடந்த சில தினங்களில் மட்டும் ஆயிரம் வியட்காங்கியர் கொல்லப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டது.

நேற்று மீண்டும் வியட்காங்கியர் ரொக்கட்டுகள் மூலம் மூர்க்கமான தாக்குதல் ஒன்றை நடத்தினார்கள். சைகோனிலுள்ள அமெரிக்கத் தூதரத்தின் முன்னாலுள்ள ஒரு வீட்டின் மீது ஒரு ரொக்கட் வந்து வீழ்ந்தது. தென்வியட்னாமில் பலபகுதிகளிலும் நூற்றுக் கணக்கான இடங்களில் வியட்காங்கியர் தாக்குதல்களை நடத்தியுள்ளனர். இந்தத் தாக்குதல்களுக்கு எதிராக அமெரிக்கர் பெரிய அளவில் தாக்குதல் ஒன்றை முடுக்கி விடவிருப்பதாகத் தெரிகின்றது.

## எம் ஜி ஆர். மன்றம் விழா எடுக்கும்

யாழ்ப்பாணம், செவ்வாய்

எம். ஜி. ஆரின் நூறுவது படம் ஒளிவிளக்கு இலங்கையில் வெற்றிகரமாக ஓடிக்கொண்டிருப்பதால் நூறுவது நாளை சிறப்பாகக் கொண்டாடுவதற்கு கல்வியங்காடு மக்கள் நூல் நிலையத்தில் அடுத்தமாதம் முதல் திகதி எம். ஜி. ஆர். மன்றங்கள் அனைத்தும் ஒன்று கூடி திட்டம் வகுக்க இருப்பதாக யாழ்ப்பாணம் எம். ஜி. ஆர். மன்றத்தினர் அறிவித்துள்ளனர்.

## கிராமசபைத் தேர்தல்கள்

குரும்பசிட்டி, திங்கள்

மாவட்ட உதவி தேர்தல் அதிகாரி திரு. பீ. கந்தசாமி மல்லாகம் கிராம சபையின் புதிய தேர்தலுக்கான அபேட்சகர்கள் நியமனப்பத்திரங்களை அடுத்த மாதம் 6-ம் திகதி சபை அலுவலகத்தில் வைத்து காலை 10 மணி முதல் ஏற்றுக்கொள்வார். இக்கிராம சபை 17 வட்டாரங்களைக் கொண்டதாகும்.

19 வட்டாரங்களைக் கொண்ட ஏழாலைக் கிராம சபை புதிய தேர்தலுக்கான அபேட்சகர்கள் நியமனப் பத்திரங்கள் அடுத்தமாதம் 7-ம் திகதி காலை தாக்கல் செய்யலாம். மேற்படி கிராமசபை அலுவலகத்தில் மாவட்ட உதவி தேர்தல் அதிகாரி இவற்றை ஏற்றுக் கொள்வார்.

## 'அரசியல் லாபத்துக்காக மறைவைப் பயன்படுத்தாதீர்'

குரும்பசிட்டி, திங்கள்

அறிஞர் அண்ணாவின் மறைவை அரசியலுடன் சம்பந்தப்படுத்தி தத்தமது கட்சிக்கு செல்வாக்கும், வளர்ச்சியும் தேடவும் அரசியல் லாபம் பெறவும் சிலர் முற்படுகின்றனர். இதில் மக்கள் சிக்கிக்கொள்ளாது தப்பித்துக் கொள்ளல் வேண்டும். மனித குலம் ஈடேற அண்ணாவின் கருத்துக்களை மக்கள் உள்ளத்தில் உணர்ச்சியுடன் பதித்து அவற்றை செயல்படுத்துதல் அவசியம்.''

மல்லாகம் விவேகானந்தா கல்வி நிலையத்தில் நடைபெற்ற கவிஞர் விஜயேந்திரனின் ''அண்ணா என்றொரு மானிடன்'' நூல்வெளியீட்டு விழாவிற்கு தலைமைவகித்துப் பேசுகையில் வழக்கறிஞர் நம சிவப்பிரகாசம் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

நூல் வெளியீட்டுரை நிகழ்த்திய கவிஞர் வீ. கந்தவனம் கூறியதாவது:-

தமிழ்ப்பற்று நிறைந்தவர்கள் எல்லோரும் அண்ணாவின் தொண்டைப் போற்றுகின்றனர். அரசியல் கோட்பாடுகள், சமுதாயத்தொண்டுகளில் ஒரு சிலரைப் புண்படுத்தினாலும் அண்ணாகாந்தி சொல்லியவற்றை வாழ்க்கையில் செயலில்காட்டினார். ஏழைகளை வாழவைப்பதே நமது சமயம் என அண்ணா கூறியிருந்தார். நாவலருக்குப் பின்னர் பேச்சுக்கலை, வசன நடையை தமிழில் வளர்த்த பெருமை அண்ணாவைச் சார்ந்ததாகும். அண்ணாவின் படைப்புக்களை ஒதுக்கியவர்கள் கூட தற்போது தீவிரமாக அவரின் நூல்களை தேடுகின்றனர்.

நூலின் முதற் பிரதியை ஏழாலை கிராமசபைத் தலைவர் திரு. க. சிவகுரு நூலாசிரியரிடமிருந்து பெற்றுக் கொண்டார்.

பண்டிதை தங்கம்மா அப்பாக்குட்டி, சி. சிவஞானசுந்தரம், பொ. கணேசமூர்த்தி ஆகியோரும் பேசினர்.

கட்டுவன் தெற்கு பாரதி சனசமூக நிலையத்தினரும் அமரர் அண்ணாவுக்கு அஞ்சலி செலுத்தும் முகமாக திரு. மு. சிவரத்தினம் தலைமையில் நிலைய முன்றலில் அனுதாபக் கூட்டம் நடாத்தினர்.

## ''அர்த்தமற்ற நம்பிக்கை'

யாழ்ப்பாணம், செவ்.

''இந்தியாவிலுள்ள பதினைந்து ராஜ்யங்களில் ஒன்றான தமிழக அரசாங்கம், இலங்கையிலே வாழுகின்ற தமிழர்களுக்கு உதவிகளோ, சலுகைகளோ செய்யும் என்று தென்னிலங்கையில் உள்ள சில அரசியல் வாதிகள் கூறிக்கொள்வதில் எவ்வித அர்த்தமுமில்லை. அதே வேளையில் இங்குள்ள தமிழர்கள், தமிழக அரசு தங்களுக்குச் சலுகைகள் செய்யும் என்று எண்ணுவதிலும் அர்த்தமில்லை. மத்திய அரசாங்கத்தின் அனுமதியின்றி எதனையுமே செய்ய ராஜ்ய அரசாங்கத்திற்கு அதிகாரமில்லை'' இவ்வாறு சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி விடுதி மாணவர் மன்றத்தினரால் நடாத்தப்பட்ட அண்ணா அஞ்சலிக் கூட்டத்தில் பிரதம பேச்சாளராகக் கலந்து உரைநிகழ்த்திய திரு. வ[illegible] பொன்னம்பலம் குறிப்பிட்டார்.

அவர் மேலும் கூறியதாவது:-

''தி. மு. க. தனியொருகட்சியாக மத்திய அரசை அமைக்க முடியாவிட்டாலும், பல கட்சிகளும் சேர்ந்து ஒரு கூட்டு அரசாங்கத்தை [illegible] ஒரு வெங்காயக்கட்சி என்று கூறியபோது அதற்குஅண்ணா வெங்காயத்தை நீள்புறமாக வெட்டினால் சங்கும், குறுக்காக வெட்டினால் சக்கரமும் தெரியுமென்றும், இவை திராவிடரின் சின்னங்கள் என்றும் கூறினார்'' என்று குறிப்பிட்டார்.

கூட்டத்தில் சிறப்புநிகழ்ச்சியாக 'மஹாகவி'யின் தலைமையில் நடைபெற்ற கவியரங்கில், கவிஞர்கள் இ. நாகராஜன், அரியாலையூர் வே. ஐயாத்துரை, கல்வயல் வே. குமாரசாமி ஆகியோர் பங்குபற்றினர். கூட்டத்திற்கு வந்திருந்த அனைவரையும் மன்றத்தலைவர் செல்வன் சு. மகாலிங்கசிவம் வரவேற்றுப் பேசினார். வித்துவான் சி. ஆறுமுகம் நன்றியுரை வழங்கினார். (ந. நி.)

## தபால் பை வைத்திருந்தனராம்

குரும்பசிட்டி, திங்கள்

அச்சுவேலியைச் சேர்ந்த ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்களான கணவன், மனைவி, மகன் ஆகிய மூவருக்கு எதிராக சட்டவிரோதமாக அரசாங்கத்திற்குச் சொந்த

## தமிழ் நாடு சட்டசபையில் நடந்த சூடான விவாதம்

சென்னை, பெப். 24

கவர்னர் உரைமீது தமிழ் நாடு கீழ்சட்டசபையில் விவாதம் நடைபெற்றுக் கொண்டிருக்கையில் சாதி சம்பந்தமாக எழுந்த ஒரு குறுக்கீட்டை முதலமைச்சர் மிக சாமர்த்தியமாக சமாளித்து விவாதம் விரசமாகப் போகாமல் தடுத்தார்.

நாகர்கோவிலில் முதலமைச்சர் திரு. கருணாநிதி விடுத்த ஓர் அறிக்கையைப் பற்றி திரு. ஜே. ஜேம்ஸ் காங்கிரஸ்) குறிப்பிடுகையில் உபயோகித்த ஒரு வார்த்தை சபையின் கௌரவத்துக்கு உகந்ததல்லவென்று திரு. ஆதித்தன் சுட்டிக் காட்டி அந்த வார்த்தையை சபைக் குறிப்பிலிருந்து நீக்கி விடும்படி கேட்டுக் கொண்டார். இந்த ஒழுங்குப் பிரச்னை ஏற்றுக் கொள்ளப்பட்டு அந்த வார்த்தை குறிப்பு ஏட்டிலிருந்து நீக்கப்பட்டது.

''காமராஜ் நாடார்'' என்று ஜாதியின் பெயரைத் தூண்டி திரு. காமராஜ் சார்பில் ஓட்டு சேகரித்ததாக திரு. மு. கருணாநிதி தேர்தலின்போது கூறியதாக மேற்படி அங்கத்தினர் குற்றம் சாட்டியபோது, முதலமைச்சர் குறுக்கிட்டு, ''ஜாதியை எல்லாம் கடந்து வளர்ந்துள்ள ஒரு தலைவர். இம்மாதிரி 'நாடார்' என்ற அடைமொழியை பெயருடன் வாக்காளர் பட்டியலில் சேர்க்கலாமா என்றுதான் கேட்டேனே தவிர அவரைப்பற்றி வேறென்றும் தவருகச் சொல்லவில்லை'' என்று விளக்கினுர்.

''நாடார்'' என்ற சொல் வாக்காளர் பட்டியலில் எழுதும்போது சாதாரண அதிகாரிகள் அவ்வாறு எழுதிவிட்டிருக்கக்கூடுமென்றும் அதுவும் தி. மு. க. ஆட்சி காலத்தில்தான் நடைபெற்றுக்கிறது என்றும் திரு. பி. கருத்திருமன் உடனே குறுக்கிட்டார்.

அதை திரு. மு. கருணாநிதி மறுத்தார். 1966-ல் காங்கிரஸ் அரசாங்கம் இருந்தபோதுதான் அவ்வாறு பதிவாகியுள்ளதென்றும், எப்படியாகிலும் மேற்கொண்டு இதுபற்றி விவாதம் ''விரஸமாக'' ஆவதைதான் விரும்பவில்லை என்றும் இத்துடன் முடித்துவிடுவதே நல்லது என்றுக் கேட்டுக் கொண்டார்.

## இஸ்ரேல் - ஜோர்டான் மோதல்

# இஸ்ரேல் விமானம் சுட்டுவீழ்த்தப்பட்டது

அம்மான், பெப். 24

**இஸ்ரேல் படைகளுக்கும் ஜோர்டான் படைகளுக்குமிடையில் நேற்று மீண்டும் பலத்த மோதல்ஏற்பட்டது. இந்த மோதலில் இஸ்ரேலியர் பலர் காயமடைந்ததாகவும் ஒருவிமானம் சுட்டுவீழ்த்தப்பட்டதாகவும் ஜோர்டான் அறிவித்தது.**

நான்கு இஸ்ரேலிய 'ஜீப்'கள் ஜோர்டான் எல்லையை ஊடுருவிவந்து தாக்குதலில் ஈடுபட்டனர் இதனை எதிர்த்து ஜோர்டானியரும் தாக்குதல் நடத்திஞர்கள். அதே சமயம் ஏழுஇஸ்ரேலியவிமானங்களும், ரொக்கட்டுகளையும் 'நேபாம்' குண்டுகளையும் வீசி தாக்குதல் நடத்தின. ஒரு விமானம் சுட்டுவீழ்த்தப்பட்டது. ஜீப்களும் அடித்து நொருக்கப்பட்டன. காயமடைந்தவர்களை இஸ்ரேல் ஹெலிகொப்டர்கள் எடுத்துச் செல்வது தெரிந்தது. ஜோர்டான்தரப்பில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டது.

'அரபு கொமாண்டோ'க்கள் கும்பல் ஒன்றைத் துரத்திப் போகையில் ஜோர்டானியர் தம்படைகளைத் தாக்கியதாகவும் தமது படைகள் திருப்பித்தாக்கியதாகவும் இஸ்ரேல் தெரிவித்துள்ளது. இந்தத் தாக்குதலில் ஒரு இஸ்ரேலியர் காயமடைந்ததாகவும் தெரிவிக்கப்பட்டது.

இந்த நிகழ்ச்சி சாதாரண உள்ளூர் நிகழ்ச்சியென்றும் சமீபத்திய அரபு நடவடிக்கைகளுக்கு எதிரான நடவடிக்கையாக இது இராது என்றும் மேற்காஸிய நிருபர்கள் கூறுகிருர்கள்.



## அறுவை சிகிச்சை

நியுயோர்க், பெப். 24

அமெரிக்காவில் முன்பு அதிபராகவிருந்த ஜெனரல் ஐஸனேவர் மீண்டும் கடுமையான சுகவீன முற்றிருக்கிருர். சமீபகாலமாக வே ஆஸ்பத்திரியிலிருந்துவரும் ஐஸனேவரின் வயிற்றில் சிறுகுடலில் சிக்கலான ஒரு நோய் ஏற்பட்டிருக்கிறதாம். இன்று அவருக்கு அறுவை சிகிச்சை நடைபெறவிருப்பதாக டாக்டர்கள் அறிவித்துள்ளனர்.

சடடசபையில்

## 81 வயது அங்கத்தவர்

முதல்வர் பாராட்டு

சென்னை, பெப். 24

சென்னை கீழ் சட்டசபையில் மிகவும் வயது கூடிய அங்கத்தவரான திரு. கோமதி சங்கர தீட்சதருக்கு 81 வயது பூர்த்தியானதை சபையில் அங்கத்தவர்கள் பாராட்டிபேசிஞர்கள். சபாநாயகர் திரு. புலவர் கோவிந்தன் முதலில் பாராட்டு தெரிவித்தார். 1957-ம் ஆண்டுமுதல் சபையில் பணிபுரிந்துவரும் தீட்சதர் பண்புள்ளம் கொண்டவர் என்று அவர் குறிப்பிட்டார்.

முதலமைச்சர் திரு. மு. கருணாநிதி பின்வருமாறு பாராட்டிப் பேசிஞர்.

திரு. கோமதி சங்கரதீட்சதரைப் பார்த்தால் 81 வயதுஆனவராகத் தோன்றவில்லை. வயதைத் திருப்பிப் போட்டால்தான் பொருத்தமாக இருக்கும். அவர் என்ன காயகல்பம் செய்து கொண்டாரோ தெரியவில்லை. உள்ளத் தூய்மையும் தேசிய உணர்ச்சியும் மொழிப்பற்றும் அவரைத் திடகாத்திரமாக வைத்திருக்கின்றன என்று தோன்றுகின்றது. அவர் மிகவும் பண்பாட்டுடனும் கண்ணியத்துடனும் நடந்துகொள்கிருர். அவர் நீண்டகாலம் வாழ்ந்திருந்து தொண்டுபுரியவேண்டும். பட்ஜட் கூட்ட முடிவுக்குள் அவருக்கு விருந்து வைத்து பாராட்ட உத்தேசித்திருக்கிறேன்.

எதிர்க்கட்சித் தலைவர் திரு. பி. ஜி. கருத்திருமன் பேசுகையில் தேசியம், காங்கிரஸ் என்ற இரு மருந்துகளுமே திரு. தீட்சதருக்கு காயகல்பமாக இருந்துள்ளன என்ருர்.

திரு. மூக்கையா தேவர் (பார்வார்டு பிளாக்) பேசுகையில்: திரு. தீட்சதரை விடுதலை வீரர், தேசபக்தர், அரசியல் தாத்தா என்று வருணித்தார். காலஞ்சென்ற திரு. வாஞ்சி அய்யரு (ஆஷ்துரையை சுட்டுக் கொன்ற தீவிர அரசியல்வாதி) டன் நெருங்கிப் பழகியவர் என்ற காரணத்தால் அவரது வரலாற்றை எழுத வேண்டும் என்று திரு. தீட்சதரை திரு. தேவர் கேட்டுக்கொண்டார். தேசபக்தர் தீவிரவாதிகளின் வரலாறுகளை எழுத அரசாங்கம் ஊக்கமளிக்கவேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

ட[illegible]காவில் கூறியிருக்கிருர். இந்தப் பதவிக்குத் தகுதியான ஒருவரைத் தெரிவு செய்வதில் எதிர்க் கட்சிகளுக்கிடையில் கருத்து ஒற்றுமை ஏற்பட்டால் ஜனுதி[illegible] பதவிக்குத் தாம்

கள் தெரிவிக்கும் [illegible]றைபாடுகள் யாவும் உண்மையானவைதான் என்று லாகூரில் எயார் மார்வுல் அஸ்ஹாகானும் அறிவித்திருக்கிருர்.

## 'அண்ணுவின் குணங்களைப் பாராட்டுபவன் நான்

### நெய்வேலி சம்பவம் பற்றி வாரியார் கவலை

மதுரை, பெப். 24

''சத்தியம், தருமம் ஆகிய சிறப்பியல்புகள் காரணமாக காந்திஜி, மகாத்மாவாக விளங்கிஞர். அவரைப்போலவே அமரர் அண்ணுதுரையும், பிறர் உணர்ச்சிகளைப் புண்படுத்தியதில்லை. இனிய சொற்களை மொழிபவர். நேர்மையானவர்; மாசில்லாத இதயம் படைத்தவர். அரசியல்வானிலே சூரியனைப்போல் ஒளிவீசிவந்தார். தமிழருக்காக அவர் ஆற்றிய இணையில்லாச் சேவைக்காக தமிழகம்என்றென்றும் அவருக்குக் கடமைப்பட்டுள்ளது.''

நெய்வேலியில் அண்மையில் நடந்த சம்பவம் சம்பந்தமாக திருமுருக கிருபானந்தவாரியார் வெளியிட்டுள்ள அறிக்கையொன்றில் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

திரு. அண்ணுதுரையின் மறைவிஞல் அதிகம் துயரடைந்திருப்பவன் நான்தான். நான் அவரைத் தாழ்வாகப் பேசியதாக யாரேனும் எண்ணிஞல் அது தவருகும்.

அண்ணுதுரையின் குணநலன்களைப் போற்றுபவன் நான். அவரின் உதாரணத்தைப் பின்பற்றி நடக்கும்படி நண்பர்களுக்கெல்லாம் சொல்லிவருகிறேன். நெய்வேலியில் நடந்தவைகள் அறியாமையிஞல் நடந்துவிட்டதாக எண்ணுகிறேன். அது என் விதிவசமானதாக இருக்கலாமெனவும் எண்ணுகிறேன்.

பத்தொன்பதாம் திகதி காய்ச்சல் காரணமாக உபந்நியாசம் ரத்துச் செய்யப்பட்டது, அன்றிரவு ஒருகூட்டம் திரண்டு வந்தது ஓர் அறிக்கையில் கையெழுத்திடக் கோரிஞர்கள்.

திரு, அண்ணுதுரை பற்றியும் திராவிட முன்னேற்றக் கழகம் குறித்தும் சிண்டல் செய்தது பற்றி நான் வருந்துகிறேன்.

மன்னிப்புக் கேட்கிறேன். எந்தக் கூட்டத்திலும் இம்மாதிரி நான்பேசமாட்டேன் என்று உறுதி கூறுகிறேன்' என்று அறிக்கையில் படித்த பின்னர் கூட்டம் கலைந்தது, என்றும் அவர் அவ்வறிக்கையில் கூறியுள்ளார்.

தனது 42 வருடகால உபந்நியாசத்தில் நெல்வேலியில் நடந்ததைப்போன்றதை அனுபவித்ததில்லையெனவும் அவர் அவ் அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

—

பருத்தித்துறை, திங்கள்

வதிரி அர்ச் அந்தோனியார் ஆலயத்தில் பெண்களுக்கான ஞான ஒடுக்கம் அடுத்த மாதம் 1-ம் திகதி தொடக்கம் மூன்று நாட்கள் தொடர்ந்து நடைபெறவிருக்கிறது.

பத்திரங்கள் அடுத்தமாதம் 7-ம் திகதி காலை [illegible] தாக்கல் செய்யலாம். மேற்படி கிராமசபை அலுவலகத்தில் மாவட்ட உதவி தேர்தல் அதிகாரி இவற்றை ஏற்றுக் கொள்வார்.

## ஆலய வழிபாடு

யாழ்ப்பாணம், செவ்.

அண்மையில் பாகுபாடின்றி சகலருக்கும் ஆலயக் கதவுகளைத் திறந்துவிட்ட உடும்பிராய்க் கற்பகப் பிள்ளையார் கோவிலில் சென்ற வெள்ளிக்கிழமை சாயரட்சைப் பூசையில் உடும்பிராயையும் மற்றும் அயல் கிராமங்களையும் சேர்ந்த ஏராளமான ஹரிஜன மக்கள் பங்கெடுத்து ஆலய வழிபாடு செய்தார்கள்.

அவர்களை ஆலயக் குருக்கள் அன்புடன் வரவேற்று அவர்கள் கொண்டுசென்ற அர்ச்சனைப் பொருட்களை வாங்கி பூஜைசெய்து பிரசாதம் வழங்கிஞர்.

உடும்பிராய், கோண்டாவில், உடுவில், யாழ்ப்பாணம் ஆகிய பகுதிகளிலிருந்து ஆலயவழிபாட்டிற்காக வந்திருந்த பக்தர்களில் தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கத்தைச் சேர்ந்த முன்னணித் தலைவர்களும் கலந்துகொண்டனா.

## பிரதமருக்கு மகஜர்

குரும்பசிட்டி, திங்கள்

விவசாயச் சுற்றுலாவை மேற்கொண்டு யாழ். மாவட்டத்திற்கு வருகைதரும் பிரதமர் திரு. டட்லி சேனநாயகா வடபகுதியில் விவசாயம், கூட்டுறவுத்துறைகளில் முன்னணி வகிக்கும் அளவெட்டி பலநோக்குக் கூட்டுறவு சங்கங்களின் சமாஜத்திற்கு நேரில் விஜயம் செய்வார். பிரதமரின் விஜயத்தின்போது சமாஜத்தலைவர் திரு. வ. பொன்னம்பலம் அப்பகுதி விவசாயிகளை எதிர்நோக்கும் கஷ்டங்கள், குறைபாடுகள் பற்றிய மகஜர் ஒன்றை கையளிக்கவிருக்கிருர்.

## திருவிழா நிறுத்தம்

புன்னலைக்கட்டுவன், திங்கள்

இம்மாதம் 20-ம் திகதி வியாழக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவிருந்த ஊரெழு வீரகத்தி விநாயகர் கோவில் திருவிழாக்கள் இவ்வாண்டு நிறுத்தப்பட்டுள்ளன. ஆலயப் பிரவேசத்தை முன்னிட்டே திருவிழாக்கள் நிறுத்தப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது.

அவர் மேலும் கூறியதாவது:-

''தி. மு. க. தனியொருகட்சியாக மத்திய அரசைஅமைக்க முடியாவிட்டாலும், பல கட்சிகளும் சேர்ந்து ஒரு கூட்டு அரசாங்கத்தை அமைப்பதாயிருந்திருப்பதாயின் அதன் தலைவராக நிச்சயமாக அண்ணுதான் இருந்திருப்பார். அண்ணுவின் பூதவுடலின்முன்னே முப்படைகளும் அணிவகுத்துச் செல்ல ராஜாங்க மரியாதைகளுடன் பீரங்கிவண்டியில் வைக்கப்பட்டுத் தேசியக்கொடியிஞல் போர்த்தப்பட்டுக் கொண்டு செல்லப்பட்டமை அண்ணுவின் பெருமையையும் மத்திய அரசாங்கம் அவருக்களித்துள்ள மரியாதையையும் புலப்படுத்துகின்றது.''

செல்வன் சிறிதரன் பேசுகையில் ''அண்ணு மற்றவர் கூற்றுக்குத் தகுந்த பதிலடி கொடுக்கும் ஆற்றல் படைத்தவர். ஒருசமயம்வேற்றுக் கட்சிக்காரர் தி. மு. க.

குரும்பசிட்டி, திங்கள்

அச்சுவேலியைச் சேர்ந்த ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்களான கணவன், மனைவி, மகன் ஆகிய மூவருக்கு எதிராக சட்டவிரோதமாக அரசாங்கத்திற்குச் சொந்தமான தபால்பை வைத்திருந்ததாக காங்கேசன்துறைப் பொலிஸார் தொடர்ந்திருந்த வழக்கு மல்லாகம் நீதிபதி திரு. எம். சண்முகலிங்கம் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

விசாரணையின் போது 2-ம் எதிரியான மனைவி வள்ளிப்பிள்ளை குற்றச்சாட்டை ஒப்புக் கொண்டதன்பேரில் நீதிபதி ரூபா 10 முடிக்குரிய செலவு செலுத்த உத்தரவிட்டார். தபால் பையை தபால் நிலையத்தில் திரும்ப ஒப்படைக்கும்படி உத்தரவிடப்பட்டது. ஏனைய இரு எதிரிகளும் விடுதலையாகினர். பொலிஸ் இன்ஸ்பெக்டர் அமீன் வழக்கை நடத்திஞர்.


# லங்காலோஹ

இலங்கைத் தயாரிப்பு உலோகப் பொருள்கள்

**சிறந்த ரகம், நம்பிக்கை, நீடியகால பாவனைக்கு**

லங்காலோஹ மண்வெட்டிகள்

அளவு 8'x10''—சில்லறை விலை ரூ. 8-25 ஒன்று
அளவு 7'x10''—சில்லறை விலை ரூ. 7-50 ஒன்று

யாழ்ப்பாண மோஸ்தர் மண்வெட்டி

உயர்ந்த உறுதி வாய்ந்த உலோகம்

நிறை 4 இருத்தல்



சில்லறை

ஒன்றுக்கு

ரூ. 14-00

இலங்கை அரசாங்க உலோகப் பொருட் கூட்டுத்தாபனம்

242, ஹவலக் ரோட், கொழும்பு-5.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மணிவாக்கு**

உடலும் உள்ளமும் எப்போதும் நல்ல செயல்களில் ஈடுபட்டிருக்க வேண்டும்:

-- மகாத்மாகாந்தி


# ஈழநாடு

Eelanadu National Tamil Daily
Telegram: "EELANADU" Jaffna.
Post Box: 49, Jaffna. Telephone: 38?

யாழ்ப்பாணம், கீலக வருஷம் மாசிமாதம் 14-ந் திகதி
(25 - 2 - 69)


## இலங்கை பொதுத்தேர்தல்

இலங்கை ஆட்சி மன்றத்துக்கான பொதுத் தேர்தல் இனி எந்தச் சமயமும் நடைபெறலாம் என்று பிரதமர் டட்லி சேனநாயக்கா குளியாப்பிட்டியில் நடைபெற்ற ஐக்கிய தேசியக்கட்சி மகாநாட்டில் ஒரு முக்கியமான அறிவித்தல் செய்தார். அவர் விரும்பினுல் இன்னும் ஒருவருடகாலம் இதே அரசாங்கம் ஆட்சி செய்யலாம். என்ருலும் இப்போது தமது கட்சிக்கு நாட்டில் நல்ல ஆதரவு இருக்கிறதென்பதை உணர்ந்து, இச்சமயம் பொதுத் தேர்தலை நடத்திஞல் அதிக வெற்றி பெற முடியுமென்று நம்பியே பிரதமர் டட்லி இந்தத் தீர்மானம் செய்திருக்க வேண்டும். இதற்கான உரிமையும் அதிகாரமும் ஜனநாயக முறைப்படி அவருக்கு உண்டு.

வகுப்புவாதத்தைத் தூண்டி பதவிக்கு வந்திடலாமென்றுசிலர்தப்புக்கணக்குப் போடுவதாயும் திராவிட முன்னேற்றக்கழகத்தை இழுத்துதவருன பிரசாரம்செய்வதாகவும் பிரதமமந்திரி எச்சரித்துள்ளதில் அதிக உண்மையுண்டு, பொதுத் தேர்தல் என்ருலே இந்நாட்டில் சிறுபான்மையினரான தமிழ் பேசும் மக்களைத் தாக்கி துவேஷப்பிரசாரம் செய்வதுதான் இதுவரை பழக்கமாக இருந்து வந்துள்ளது. ஐ. தே. கட்சியும் கூட ஒரு சமயம் இதே முறையைக்கையாண்டு, தக்க பாடம் கற்றுக் கொண்டதென்பதை மறப்பதற்கில்லை. வகுப்புவாதப் பிரசாரத்தை சிங்களப் பொது மக்களும் விரும்பவில்லை என்பதை சென்ற பொதுத்தேர்தல்கள் காட்டியுள்ளதால் எதிர்க்கட்சியினர் கூட, இம்முறையை இனி அதிகம் நம்புவதற்கில்லை. மேலும் வகுப்பு துவேஷப் பிரசாரத்தால், தமிழரின் வாக்குகளை மலைநாடு உள்ளிட்டு பல தொகுதிகளில் அவர்கள் அடியோடு

வேண்டுமென்றுவற்புறுத்தி, அதை அமுல் நடத்தியும் வந்தார். ஆனுல் அவர்காலமானதும் யு. என். பி. யின் களனி மகாநாட்டிலே, தமிழ் உரிமையைப் பறித்து, சிங்களத்தைமட்டும் அரசாங்க மொழியாக்கும் தீர்மானம் நிறைவேறியதால் ஐ. தே. கட்சியிலிருந்து தன்மானமுள்ள தமிழர் வெளியேறினர். அது வகுப்புவாத கட்சியாகி பொதுத் தேர்தலிலும் படுதோல்வி அடைந்தது.

அப்போது திரு. டட்லி அக்கட்சித்தலைவராக இல்லாதது உண்மையே. என்ருலும், தமிழர் மீண்டும் அக்கட்சியிலே மானத்துடன் சேரக்கூடிய அளவுக்கு அதன் மொழிக்கொள்கை மாறவில்லை. ஐ. தே. கட்சி செய்து விட்டஇந்த "இமாலயத்தவறைஉணர்ந்து, தேசிய ஐக்கியத்துக்குத் தமது தந்தை வகுத்த அந்த முக்கியமான யோசனையை, பிரதமர் டட்லி சேனநாயக்கா பின்பற்றத்தயாரா? என்பது மிக முக்கியமான கேள்வி. அப்படிச் செய்தால்தான் தம் தந்தை காட்டிய வழியிலேயே தாம் செல்வதாக அவர் கூறுவது உண்மையாகும். தமிழரும் மீண்டும் அக்கட்சியிலே தன்மானத்துடன் சேரவும். தேசிய ஒற்றுமை பலப்படக்கூடியதாகவும் இருக்கும்.

தேசிய அரசாங்கத்தை தமிழரின் இரு முக்கிய கட்சியினரும் ஆதரிப்பதால் தமிழரின் பூரண ஆதரவு இருப்பதாக யாரும்தவருக நினைக்கக் கூடாது. இந்த மந்திரி சபையில் ஒரு தமிழர் கூட இருக்க முடியவில்லை. சென்ற பொதுத் தேர்தலில் ஐ. தே. கட்சிக்கு தனிப் பட்டமெஜாரிட்டி கிடைத்திருப்பின், தேசிய அரசாங்கம் அமைக்கப்பட்டிருக்குமா? இனிவரும் தேர்தலில் அவ்

# இந்தியா திரும்புகிறவர்களுக்காக கூட்டுறவுநிதி

## அபிவிருத்தி 'வங்கி'

## இந்திய அரசு ஏற்பாடு

புதுடில்லி, பெப். 24

இலங்கை- பர்மா போன்ற வெளிநாடுகளிலிருந்து இந்தியாவுக்குக் குடிபெயர்ந்து வருகிறவர்களுக்கு புனர்வாழ்வுக்கான கடன்வசதிகள் செய்து கொடுக்கும் வகையில் கூட்டுறவுநிதி, மற்றும் அபிவிருத்தி வங்கி போன்றவற்றை நிறுவுவதற்கு இந்திய அரசாங்கம் முடிவு செய்திருக்கின்றது.

புதுடில்லியில்நடைபெற்ற றுவாழ்வுத்துறை போர்டின் கூட்டத்தில் மறுவாழ்வுத்துறை அமைச்சர் திரு. ஜெய்சுக்கலால் ஹாத்தி இத்தகவலைத் தெரிவித்தார்.

அடுத்த ஆண்டுகளில் இந்தியாவுக்கு இலங்கையிலிருந்து ஒருலட்சத்துமுப்பதாயிரம் இந்திய இனத்தவர் திரும்பிவருவதற்கு முன்னர் இந்த ஏற்பாடுகள் செய்தாக வேண்டும் என்று திரு. ஹாத்தி கூறினுர்.

வெளிநாடுகளிலிருந்து வரும் இந்திய இனத்தவருக்கு மறுவாழ்வு ஏற்பாடுகள் செய்வதில்அரசாங்கத்துறை மட்டுமன்றி தனியார்துறையினரும் அக்கறைகொள்ளும் விதத்தில் அவர்களுக்கு ஊக்கமளிக்கப்படவேண்டும் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

மின்தறி நிலையம்

## 'ஊறணி மக்களே நடவடிக்கைளடுங்கள்'

### எஸ். ஜே. வி கூறிய யோசனை

அளவெட்டி, ஞாயிறு

'அரசாங்கத்திடம் இரண்டரை இலட்சம் ரூபாய் கடன் பெற்று ஊறணியில் அமையவிருக்கும் மின்தறி நிலையம் பலநோக்குக் கூட்டுறவு சங்கத்தின்கீழ் இயங்க ஊறணி மக்களே நடவடிக்கை எடுக்கவேண்டும்'' என திரு. எஸ் ஜே. வி. செல்வநாயகம் ஊறணியில் கூறினுர்.

ஊறணி புனித அந்தோனியார் கிராமமுன்னேற்றச் சங்க, சனசமூகநிலைய 11-ம் ஆண்டு வருடாந்தக்கூட்டம் நேற்று திரு. தே. யோசெப் தலைமையில் நடைபெற்றது.

இவ்விழாவில் கலந்து கொண்டு உரையாற்றிய காங்கேசன்துறை ஆட்சி மன்ற உறுப்பினர் திரு எஸ். ஜே. வி. செல்வநாயகம் மேலும் கூறியதாவது: ஊறணி மக்களின் அபிவிருத்தியை முன்னிட்டு ஊறணி மக்களுக்கென ஒரு தனி வட்டாரமாக்கி தரும்படி இவ்வூர் மக்கள் என்னிடம் கோரிக்கை விடுத்துள்ளனர். இதை விரைவில் நிறைவேற்றுவேன், காங்

வட்டாரமாக்க நடவடிக்கை எடுப்பேன்.

சவச்சாலைக்கான காணியை சுவீகரிக்கும்படி அரசாங்க அதிபருக்கும் எனக்கும் கோரிக்கை விடுத்தீர்கள். சவச்சாலைக்கான காணியை கட்டாயமாக சுவீகரித்து உதவ அரசாங்கத்துடன் தொடர்புகொள்வேன் என்ருர்.

வலி-வடக்கு காரியாதிகாரி திரு. பி. எல். பற்றிக்ஸ் பேசுகையில், உணவு உற்பத்தியைப் பெருக்க விவசாயிகளுக்கு முதலிடம் கொடுப்பதுபோல இந்நாட்டில் மீன்பிடி தொழிலை முன்னணிக்கு கொண்டுவர அரசாங்கம் உதவி செய்யும் என நம்புகிறேன். கடற்றெழிலில் சிரமதான மூலம் என்ன வேலை செய்ய வேண்டுமாயினும் எம்முடன் தொடர்பு கொண்டு அரசாங்கத்திடம் நன்[illegible]டை பெற்று விவசாயத்தையும், கடற்றெழிலையும் முன்னேற்றி நாட்டை செழிக்கச் செய்ய வேண்டும் என்ருர்.

உள்ளூராட்சி அமைச்சு [illegible]வு உத்தியோகஸ்தர்

## கரம்பனில் சிவராத்திரி

கரம்பன், திங்கள்

ஊர்காவற்றுறை, கரம்பன், சுணபதீச்சரம் ஸ்ரீ காசி விசாலாட்சிஅம்பாள் சமேத ஸ்ரீகாசி விசுவநாதேஸ்வரர் ஆலயத்தில் சிவராத்திரிதின விழாவையொட்டி நான்கு சாமங்களிலும் விசேட அபிஷேக ஆராதனைகளும் அனலையம்பதி பிரம்மஸ்ரீ சு. சோமசுந்தரக் குருக்கள் "காரைக்கால் அம்மையார்" சரித்திரமும் "திருப்பெருந்துறை மகத்துவம்" என்னும் விடயம் பற்றிப் பிரசங்கமும் "சிவன் இராத்திரி விரத மகத்துவமும் விதிமுறைகளும்" என்னும் பொருள் பற்றி உபந்நியாசமும் சிறப்பாக நடைபெற்றன. பெருந்தொகையான பக்தர்கள் கலந்து விழாவைச்சிறப்பித்தனர்.

## இளம்பெண் தற்கொலை

### மாத்தறைக்குப்போக விடவில்லையாம்

யாழ்ப்பாணம், செவ்.

மாத்தறையிலுள்ள தனது மூத்த சகோதரியிடம்போவதற்கு பெற்ருேர் மறுத்ததால் 22 வயது இளம்பெண் ஒருவர் நச்சுத்திராவகம் அருந்தித்தற்கொலை செய்தார். இப்பரிதாப சம்பவம் பண்டத்தரிப்பில் நடைபெற்றது.

மாத்தறையில் ஆசிரியையாகப்பணியாற்றும் தனது சகோதரியிடம் போவதற்கு எஸ். சாராதாதேவி என்ற பிரஸ்தாப பெண் அனுமதி கேட்டதற்கு அவரது தாயும் தந்தையும் மறுத்ததாகவும், இதனுல் மனமுடைந்த அவர் கிருமிநாசினி அருந்[illegible]தாகவும் விசாரணையி[illegible]போது தெரிவிக்கப்பட்டது.

மரணவிசாரணை நடத்திய [illegible] என். செல்வநாயகம் தற்கொலையெனத் தீர்ப்பளித்தார். ([illegible]நி.)

## தனிப்பட்ட கல்லூரிநிறுவ பட்டதாரிகள் சங்கம் முடிவு

யாழ்ப்பாணம், செவ்.

கல்வி இலாகாவின் அனுமதியுடனும், உதவியுடனும் சங்கத்தின் சார்பில் ஒரு தனிப்பட்ட கல்லூரி நிறுவ வேண்டும் என்றும், நேற்று அகில இலங்கை வேலையற்ற பட்டிதாரிகள் சங்கம் தீர்மானித்துள்ளது.

யாழ். போதனுகழகத்தில் சங்கத்தலைவர் திரு க. சதானந்தன் தலைமையில் சங்கக் கூட்டம் நடைபெற்றது. பொருளாளராக திரு பி. சிவசண்முகமூர்த்தியும் இணைச்செயலாளராக திரு. டபிள்யூ. வித்தியானந்தாவும், உபதலைவராக செல்வி வசந்தா வேலுப்பிள்ளையும், உப-செயலாளராக செல்வி விக்னேஸ்வரி வேலுப்பிள்ளையும் தெரிவு செய்யப்பட்டனர்.

நெசவுசாலை நிறுவுவது பற்றி அடுத்தமாதம் 1-ம் தேதி பிற்பகல் ஊர்காவற்றுறை எம். பி. திரு. வ. நவரத்தினத்தை, அவரது இல்லத்தில் சந்தித்து ஆலோசனைபெறுவதென்றும் தீர்மானிக்கப்பட்டது.

சர்வகட்சி தலைவர்களையும் அழைத்து கொழும்பு நகரில் ஒருபகிரங்கக்கூட்டம்நடாத்துவதென்றும் தீர்மானிக்கப்பட்டது.

## புளியந்தீவு—குறிகாட்டுவன் படகுசேவை ஆரம்பம்

அனலைதிவு, திங்கள்

அனலைதீவு, புளியந்தீவு-இறுப்பிட்டி மோட்டார்ப் படகுச் சேவை ஒன்று புதிதாக ஆரம்பிக்கப்பட்டுள்ளது. தீவுப்பகுதி மோட்டார் வள்ள ஐக்கிய சங்கத்தினரால் நடாத்தப்படும் இச்சேவையின் விபரம் வருமாறு:

நயினுதீவிலிருந்து காலை 8-30 மணிக்குப் புறப்பட்டு புளியந்தீவுத் துறைமுகத்தைக் காலை 9 மணிக்கு வந்து சேருகிறது. புளியந்தீவிலிருந்து காலை 9-30 மணிக்குப் புறப்படும் படகு இறுப்பிட்டிக்கு 10-15க்கும் இறுப்பிட்டியிலிருந்து நண்பகல் 12 மணிக்குப் புறப்படும் படகு, புளியந்தீவுக்கு மாலை 12-45க்கும், புளியந்தீவிலிருந்து பிற்பகல் 1 மணிக்குப் புறப்படும் படகு நயினுதீவுக்கு பிற்பகல் 1-30 க்கும் போய்ச் சேருகிறது.

நயினுதீவு நாகபூஷணி அம்மன் கோவிலுக்கு புளியந்தீவு நாகேஸ்வரன் கோவிலிலிருந்து சர்ப்பம் ஒன்று புஷ்பம் எடுத்துக் கொண்டு செல்வதாகக் கூறப்படுவதால் நயினுதீவுக்கு வரும் யாத்திரிகர்கள் அனலைதீவு புளியந்தீவு நாகேஸ்வரன் ஆலயத்திற்கும் சென்று திரும்பக்கூடியதாகவிருக்குமெனக் கருதப்படுகிறது.

அனலைதீவிலிருந்து காலை 7-30 மணிக்கும், 8 மணிக்கும் பிற்பகல் 1-45 மணிக்கும் ஊர்காவற்றுறைக்கு

## புலவர் கோவிந்தன் வாழ்க்கைக் குறிப்பு

சென்னை, பெப். 24

தமிழ்நாடு கீழ்சட்டசபையின் புதிய சபாநாயகராகத் தெரிவு செய்யப்பட்டுள்ள புலவர் கோவிந்தன் வாழ்க்கை குறிப்பு வருமாறு:-

புலவர் கோவிந்தன் தமிழ் இலக்கிய சம்பந்தமாக 45 நூல்களை எழுதியிருக்கிருர். 1917 ஜூன்மாதம், 13திகதி அன்று அவர் பிறந்தார். வ. ஆ. மாவட்டம் செய்யாறு கழக உயர்நிலைப்பள்ளியில் பயின்ருர். தனிப்பட்ட முறையில் படித்து பி. ஓ. எல்., எம். ஏ. பட்டங்கள் பெற்ருர். கால்டுவெல் அகராதியை அவர் தமிழில் மொழி பெயர்த்திருக்கிருர்.

1937-இல் அவர் அரசியல் வாழ்க்கை தொடங்கியது. ராஜாஜி கவர்னர் ஜெனரலாக இருந்த காலத்தில் விஜயம் செய்தபோது அவர் ஐந்து நாட்கள் கைது செய்யப்பட்டார். 1958 முதல், திருவத்திபுரம் பஞ்சாயத்து உறுப்பினராக அவர் சிறிது காலம் இருந்திருக்கிருர்.

1967 மார்ச் மாதம் அவர் சட்ட சபை உதவி சபாநாயகராக தேர்ந்தெடுக்கப்பட்டார். விவசாயியான புலவர் கோவிந்தன் திருமணமானவர். அவருக்கு 9 குழந்தைகள் இருக்கிருர்கள்.

## வாழ்த்துத் தந்தி

யாழ்ப்பாணம், செவ்வாய்

## ஐயாறன் எழுதுவது

அமரர் அண்ணு தமது அருமை மனைவியாருக்கு எவ்வித சொத்தும் விட்டுப் போகவில்லை என்ற செய்தியைக் கேட்டதும் இங்கு பலரும் திடுக்கிட்டனர். நினைத்திருந்தால் சென்ற இரண்டு வருடங்களுக்குள் அவர் பெரிய லட்சாதிபதியாகி இருக்கலாம். ஆனுல் அப்படி ஆகி இருப்பின், தமிழ் மக்களின் இவ்வளவு அமோகமான அன்பு அவருக்கு எப்டிக் கிடைத்திருக்க முடியும்?

அண்ணுவின் மனைவி திருமதி ராணிக்கு மாதாமாதம் ஒரு அலவன்ஸ் வழங்க வேண்டுமென்று, எதிர்க்கட்சியினரான காங்கிரஸ் கோரிக்கை தெரிவித்து பிரேரணை கொண்டு வந்தது. தமிழரின் பண்பையும் பெருந்தன்மையையும் உயர்த்துகின்றது.

இதுபற்றி எதிர்க்கட்சியினர் எடுத்துள்ள அக்கறையை முதல்வர் கருணுநிதி வரவேற்பதாயும் இதை பரிசீலனை செய்வதாகவும் தெரிவித்துள்ளார். அலவன்ஸ் ஆயிரம் ரூபாயாவது இருக்கலாமென்று தெரிகிறது. அண்ணுவின் மனைவியார் செய்துள்ள தியாகத்துக்கு ஒரு பெரிய கைமாருகாது.

0 0 0

இலங்கையில் இதுவரை பிரதமர்களாக இருந்தவர்களில் திரு. தகநாயக்காவைத் தவிர மற்றவரெல்லாம் செல்வந்தர்கள். அவர்களுக்கு வாழ்க்கைப் பிரச்னை இல்லை. தகாவுக்கும் மனைவி மக்கள் கிடையாது. ஒண்டிக்கட்டை. இப்போது அமைச்சராகவுமிருக்கிருர்.

ஆனுல் இங்கு அமைச்சராக இருந்தவரில் சிலர் இப்போது ஜீவனத்துக்கும் வழியின்றி சங்கடப்படுவது பலருக்குத் தெரியும். அவர்கள் அநேகமாக பிறர் தயவை நாடி பிச்சையெடுப்பது போன்ற நிலைக்கு உட்பட்டிருப்பது நாட்டுக்குப் பெருமை அளிக்கமுடியாது.

முன்னுள் எம். பி.மார்களிலும் சிலரின் பொருளாதாரம் மோசமாக இருக்கலாம். பொதுமக்களுக்குத் தொண்டாற்றியவர்கள் எக்காரணம்பற்றியும் ஜீவனத்துக்குத் தவிக்கக்கூடிய நிலைமை இருக்கக் கூடாது, ஒரு நாகரீக நாட்டுக்கு அழகல்ல. எல்லாருக்கும் பென்ஷன் வழங்க திட்டம் போடும் அரசாங்கம், முன்னுள் அமைச்சர்கள், எம். பி. மார்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காட்டியுள்ளதால் எதிர்க்கட்சியினர் கூட, இம்முறையை இனி அதிகம் நம்புவதற்கில்லை. மேலும் வகுப்புதுவேஷப் பிரசாரத்தால், தமிழரின் வாக்குகளை மலைநாடு உள்ளிட்டு பல தொகுதிகளில் அவர்கள் அடியோடு இழப்பதுடன், தமிழ்ப்பகுதிகளில் தலைகாட்டவும் முடியாமல் போகும். ஆகவே நாட்டின் நன்மையைக்கருதியேனும், எதிர்க்கட்சியினர் தங்கள் மனப்பான்மையை மாற்றிக் கொள்ள வேண்டியிருக்கும்.

இந்த நாட்டில் ஐக்கியம் ஏற்பட வேண்டுமென்றே தமது தந்தை அமரர் டி. எஸ். சேனநாயக்கா ஐக்கிய தேசியக்கட்சியை ஆரம்பித்ததாகப்பிரதமர் டட்லி கூறியுள்ளதுஉண்மையே ஆனால்அதே வழியில்தான் தமது கட்சி சென்று கொண்டிருப்பதாகக் கூறுவதுதான் சற்றே தவறானது. நாட்டுமக்களின் ஒற்றுமையின் அவசியத்தை உணர்ந்துதான் அரசியல் ஞானியும் தேசபிதாவுமான பெரிய சேனநாயக்கா சிங்களமும் தமிழும் இந்நாட்டின் அரசாங்க மொழிகளாக இருக்க சபையில் ஒரு தமிழர் கூட இருக்க முடியவில்லை. சென்ற பொதுத் தேர்தலில் ஐ. தே. கட்சிக்கு தனிப்பட்டமெஜாரிட்டி கிடைத்திருப்பின், தேசிய அரசாங்கம் அமைக்கப்பட்டிருக்குமா? இனிவரும் தேர்தலில் அவ்வளவு பலம் ஐ. தேசியக் கட்சிக்குக் கிடைத்தால், தமிழரின் உதவியையும் ஒத்துழைப்பையும் அது நாடுமா? இதுஎப்படியாயினும், உரிமை இழந்து இரண்டாம் பட்சப் பிரஜையாகி, பலவித இன்னலுக்கு உட்பட்டுள்ள தமிழ்ச் சமூகத்தவர், இச் சோதனை காலத்தில்பிளவுபட்டிருப்பது பெரிய பலவீனமாகும் தமிழ்த் தலைவர்கள், தங்களது கட்சி நன்மையைவிட, சமூகத்தின் நன்மையைக் கருதி தங்களிடையே ஐக்கியப் பட்டால் தான் மற்றவர்களின் மதிப்பைப் பெறவும், தமிழ் சமூகத்துக்கு இழந்த உரிமைகளை மீண்டும் கிடைக்கக்கூடியதாகவுமிருக்கும்.

## நிக்ஸனின் சமாதான யாத்திரை

''அமைதியைத் தேடி வந்திருக்கிறேன்'' என்ற வார்த்தையுடன் பெல்ஜியம் தலைநகரில் இறங்கியிருக்கிறார் அமெரிக்க அதிபர் திரு ரிச்சார்ட் எம். நிக்ஸன். பெல்ஜியத்திலிருந்து லண்டனுக்கும் பின்னர் ரோம், பாரிஸ், மேற்கு பெர்லின் ஆகிய இடங்களுக்கும் திரு. நிக்ஸன் செல்கிறார். உண்மையான விட்டுக்கொடுக்கும் மனப்பான்மையையும், ஆலோசனைகளில் புதிய சகாப்தத்தையும் ஏற்படுத்துவது திரு. நிக்ஸ்ன் விஜயத்தின்நோக்கம். உலக சமாதானத்துக்கு ஐரோப்பிய - அமெரிக்க ஒற்றுமையும் ஒத்துழைப்பும் மிக மிக அவசியமென்றும் இன்றையத் தேவை அதுதானென்றும் அவர் கூறுகின்றார். அதிபர் நிக்ஸனின் சமாதான யாத்திரை வெற்றிபெற வேண்டுமென சமாதானத்தில் உண்மையான ஆர்வமுள்ள அனைவரும் வாழ்த்துவர்.

அமெரிக்க அதிபர் சமாதான யாத்திரை மேற்கொண்டுள்ள இச்சமயத்தில் வியட்நாமில் மீண்டும் வெடிச்சத்தம் கேட்கத் தொடங்கியிருக்கிறது; மேற்கு ஆசியாவில் இஸ்ரேல் - ஜோர்டான் எல்லையில் மோதல் ஏற்பட்டிருக்கிறது; பெர்லினில் என்ன நடைபெறுமோஎன்ற அச்சம் தோன்றியிருக்கிறது.

இச்சமயத்தில் தான் அதிபர் நிக்ஸன் சமாதான யாத்திரை தொடங்கி ருக்கிறார். அவரது இந்த யாத்திரை ஐரோப்பாவையும் அமெரிக்காவையும் மட்டும் கருத்தில் கொண்டதாக இருக்கிறது. சமாதானமும் அமைதியும் ஐரோப்பாவுக்கும் அமெரிக்காவுக்கும் தான் தேவையானதல்ல. ஆசியா, மேற்காசியா உட்பட உலகம் அனைத்துக்கும் இன்று மிகமிகத்தேவையாக இருப்பது அமைதியும் சமாதானமும்தான். ஐரோப்பிய யாத்திரையுடன் நிக்ஸன் நின்றுவிடாது உலகநாடுகள் பலவற்றுக்கும் அதிபர் நிக்ஸ்ன் தமது சமாதான யாத்திரையை விரைவில் மேற்கொண்டு ஆசிய ஆபிரிக்க மக்களின் அபிமானத்தையும் நம்பிக்கையும் பெற முயலுவது அவசியமாகும்,

இப்பத்திரிகை. ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேலை வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில்1969-ம் ஆண்டு பெப்ரவரிமாதம் 25-ம்திகதி அச்சிட்டுவெளியிடப்பட்டது

ஊறணி மக்களின் அபிவிருத்தியை முன்னிட்டு ஊறணி மக்களுக்கென ஒரு தனி வட்டாரமாக்கி தரும்படி இவ்வூர் மக்கள் என்னிடம் கோரிக்கை விடுத்துள்ளனர். இதை விரைவில் நிறைவேற்றுவேன், காங்கேசன்துறைப் பட்டின சபை எல்லைக்குட்பட்ட இக் கிராமத்தை காங்கேசன் துறை நகரசபையாக உயராவிட்டாலும் தனி அரசாங்கத்திடம் நன்கொடை பெற்று விவசாயத்தையும், கடற்றொழிலையும் முன்னேற்றி நாட்டை செழிக்கச் செய்ய வேண்டும் என்றார்.

உள்ளூராட்சி அமைச்சு ...வு உத்தியோகஸ்தர் எ. மரீத், எஸ், கணேசன், பங்குத் தந்தை வண. பிதா. பி. எஸ் மரியதாசன், மயிலிட்டி கிராமசேவையாளர் எஸ். பத்மநாதன் ஆகியோரும் உரையாற்றினர்.

ஆசிரியருக்குக் கடிதம்

## பொதுசனப் பாதுகாப்பு

பொது மக்களையும் அவர்களின் பொருட்களையும் பாதுகாப்பதற்கென்றே பொலிஸ் படையை வைத்திருக்கின்றார்கள். அப்படியான பாதுகாவலர்களின் கால்களையும் கைகளையும் கட்டிப்போட்டால் அவர்களுக்கு இன்றைய உலகத்தில் வேலையில்லை. காடைத்தனம், கொலை, களவு, சூது மலிந்திருக்கும் காலத்தில் மக்கள் பாதுகாவலரான பொலிசுக்கு சர்வ அதிகாரமும் இருந்தும் மேற் குறிப்பிட்ட அநாகரிகமான செயல்கள் கூடிக் கூடி வருகிறதென்றால் பொலிஸாரின் சமயோசிய செயலாற்றலைக் கட்டுப்படுத்த முனைந்ததுதான் காரணமாகும். இதனால் எவ்விதம் மக்களினதும், அவர்களின் பொருட்களினதும் பாதுகாப்பு சரிவர நடக்கமுடியும் ஒரு பகுதியைக் குற்றம் சாட்ட வேண்டுமானால் நடந்ததற்கு மேலாக அநேக இடையூறுகளைத் தாமும் நடாத்திவிட்டு எதிரிகள் செய்தார்கள் என்ற முறையீடு சர்வசாதாரணமாகி விட்டது. இலங்கை மக்கள் தங்களின் வாக்குரிமைகளைப் பயன்படுத்த இன்னும் சரியான நிலைக்குவராததுபோல அவர்கள் மேன்மையான பிரசார மூலம் சமாதானமாகவும், மற்றையோருக்கு இடைஞ்சலின்றியும் வாழும் அளவிற்கு முன்னேறவில்லை ஆகையால் பொலிஸாரின் வன்முறைகள் தளர்த்தப்பட்டால், பெண்பாலாரும் மதிப்பிற்குகந்தவர்களும்பகிரங்க வீதிகளில் நடமாடவும் பயமின்றித் தங்கள் உடைமைகளை வைத்திருக்கவும் முடியாது போய்விடும் இந்நாட்களில் அநேக இளம் பெண்கள் பல தொழில்களுக்கு பல வீதிகளாலும் போக வேண்டியிருப்பதாலும், அவர்களின் நடமாட்டத்திற்கு எதுவித இடையூறும் கேடும், வராது வேலைக்குப் போகாது சோம்பித்திரியும் வாலிபர்களின் துர்ச்சேட்டைகளிலிருந்து காப்பாற்றுவதற்கு காலை 7 மணி தொடங்கி காலை 9 மணிவரையும் மாலை 3 மணி தொடங்கி மாலை 9 மணிவரையும் நகரின் பல வீதிகளிலும் பொலிஸார் மோட்டார் வாகனங்களில் மாறி மாறிக் காவல் புரிய வேண்டும். இதுபொதுசனப் பாதுகாப்பிற்கு சிறந்த ஒரு வழியாகும்.

கா. ச, நடராசா

அரியாலை.

நாவற்குழியில்

## பஸ் பிரயாணிகள் தங்குமிட

யாழ்ப்பாணம், செவ்.

பஸ் பிரயாணிகள் தங்குமிடம் ஒன்று நாவற்குழிச் சந்தியில் கட்டுவதற்குவேண்டிய ஏற்பாடுகள் செய்யப்பட்டுவருகிறது. இப் பணியைச் செய்வதற்கு யாழ்ப்பாணம் மில்க்வைற்சோப் ஸ்தாபனத்தார் முன்வந்துள்ளார்கள் (ந. நி)

## குற்றத் தடுப்பில் தொண்டர் ப்டை

உருத்திரபுரம், திங்கள்

வட்டக்கச்சி கல்மடு ஆகிய இடங்களைச் சேர்ந்த தொண்டர் படையினரை வரவழைத்த கிளிநொச்சி பொலிஸ் பகுதியினர் பயிற்சி வகுப்பொன்றை நடத்தினர். கால்நடைகள் களவுபோவது, தந்திக்கம்பிகள் அறுக்கப்படுவது போன்ற குற்றங்களைத் தடுக்க தங்களுடன் ஒத்துழைக்கும் படுவும் கேட்டுக் கொண்டனர்.

உருத்திரபுரம் தருமபுரம் பகுதிகளில் சட்டவிரோதக் குடியோற்றக்காரர்கள் நடமாடுவதாகவும், அவர்களைப் பிடித்துத் தரும் தொண்டர் படையினருக்கு தகுந்த சனமானம் வழங்கப்படும் எடியும் அறிவிக்கப்பட்டுள்ளதாகத் தெரிகிறது.

கிருமிநாசினி அருந்...யதாகவும் விசாரணையின்போது தெரிவிக்கப்பட்டது.

மரணவிசாரணை நடத்திய திரு. என். செல்வநாயகம் தற்கொலையெனத் தீர்ப்பளித்தார். (... நி.)

## ஐவர் ராஜனுமா

சுழிபுரம், திங்கள்

தொல்புரம் கிழக்கு பலநோக்கு கூட்டுறவுச் சங்க நிர்வாகிகளுக்கிடையே வெங்காயக் கொள்வனவு விடயமாக கருத்து வேறுபாடு ஏற்பட்டதால் ஐவர் நிர்வாகத்தில் இருந்து இராசினுமா செய்துள்ளதாகத் தெரிகிறது. மொத்தம் ஒன்பது உறுப்பினர்களைக் கொண்ட நிர்வாக சபையில் ஐவர் கூட்டாக இராசினுமாச் செய்ததால் சங்க பொதுக் கூட்டம் விரைவில் நடைபெறவிருக்கின்றது.

## மா மூடைகள் திருட்டு

யாழ்பாணம், செவ்வாய்

யாழ்ப்பாணத்துக்கு வந்த யலபலாக்கா என்ற கப்பலில் 25 மா மூடைகள் களவு போய்விட்டதாம், இது சம்பந்தமாக கப்பல் ஊழியர் இருவரை தற்காலிகமாக வேலை நீக்கம் செய்து வைக்கப்பட்டுள்ளதாகவும் இது பற்றி விசாரணை நடைபெற்று வருவதாகவும் அறியப்படுகிறது.

(ந, நி.)

...கும் சென்று திரும்பக்கூடியதாகவிருக்குமெனக் கருதப்படுகிறது.

அனலைதீவிலிருந்து காலை 7-30 மணிக்கும், 8 மணிக்கும் பிற்பகல் 1-45 மணிக்கும் ஊர்காவற்றுறைக்கு மோட்டார் வள்ளச்சேவை நடைபெறுகிறது. ஊர்காவற்றுறையிலிருந்து காலை 8-30 மணிக்கும், பிற்பகல் 3-00 மணிக்கும், பிற்பகல் 4-00 மணிக்கும் மோட்டார் வள்ளச் சேவை அனலைதீவுக்கு நடைபெறுகிறது.

## தந்தையை மகன் அடித்தாராம்

யாழ்ப்பாணம், செவ்.

மகனின் தகாத நடத்தையைத் தந்தை கண்டித்ததைப் பொறுக்காத மகன் நீயார் என்னைக் கண்டிப்பதற்கு என்று கூறி தந்தையின் மண்டையை பொல்லால் பதம்பார்த்தாராம்.

ஆனைக்கோட்டையைச் சேர்ந்த 60 வயது நிரம்பிய எஸ். முத்தையா என்பவரே இப் பரிதாப நிலைக்காளானவர்.

தனது மகனின் தீவிர போக்கு தமது குடும்பத்திற்கே கெட்ட பெயரைக் கொடுக்குமென்று எச்சரித்த போது மகன் அடித்ததாக பொலிஸ் விசாரணையின் போது தெரிவிக்கப்பட்டது.

மண்டையில்பலத்தகாயங்களையுடைய முத்தையா இப்போது யாழ் பெரியாஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சைபெற்று வருகின்றார். ஆனைக்கோட்டைப் பொலிசார் விசாரணை நடத்தி வருகின்றனர். (ந. நி)

...டார். விவசாயியான புலவர் கோவிந்தன் திருமணமானவர். அவருக்கு 9 குழந்தைகள் இருக்கிறார்கள்.

## வாழ்த்துத் தந்தி

யாழ்ப்பாணம், செவ்வாய்

''தமிழ்நாடு முதலமைச்சராக திரு. மு. கருணாநிதி தெரிவு செய்யப்பட்டது தமிழர் செய்த பயனே, அவரின் சேவையால் தமிழ் நாடு மேலும் முன்னேறும் என்பதில் ஐயமில்லை''. இவ்வாறு கந்தர்மடம் இளைஞர் முன்னேற்றச் சங்கத் தலைவர் திரு. எஸ், சண்முகராசா தமிழக தி. மு. கழகத்திற்கு ஒரு வாழ்த்துச் செய்தி அனுப்பிவைத்துள்ளார்.

(ந: நி.)

## விவசாய படக்காட்சி

அல்லைப்பிட்டி, திங்கள்

வேலணை கலைமகள் விவசாயச் சங்கம், கலைமகள் சனசமூக நிலையம் ஆகியவற்றின் சார்பில் விவசாயப் பகுதியினரால் விவசாயத்தை ஊக்குவிப்பது சம்பந்தமான படக்காட்சியொன்று மேற்படி சனசமூக நிலையத்தில் காண்பிக்கப்பட்டது

(8-ம்கலத் தொடர்ச்சி)

பண்ணிடைத் தமிழொப்பாய், பழத்தினிற் சுவையொப்பாய், கண்ணிடை மணியொப்பாய் கடுவிருட் சுடரொப்பாய், மண்ணிடை அடியார்கள் மனத்திடர் வாராமே, விண்ணிடைக் குருகாவூர் வெள்ளடை நீயன்றே,

— ஸ்ரீ சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

...ருத் தவிக்கக்கூடிய நிலைமை இருக்கக் கூடாது, ஒரு நாகரீக நாட்டுக்கு அழகல்ல. எல்லாருக்கும் பென்ஷன் வழங்க திட்டம் போடும் அரசாங்கம், முன்னாள் அமைச்சர்கள், எம். பி. மார்கள் இவர்களுக்கும் தேவைபட்டால்பென்ஷன் கிடைக்குமாறு ஒழுங்குசெய்யக் கடமைப்பட்டுள்ளது.

ஏழைகளும் அப்போது தான் வாழ்க்கை பயமின்றி பொதுத் தொண்டில் ஈடுபட முன்வருவதுடன், பதவியிலிருக்கையில், காற்றுள்ளபோதே தூற்றிக் கொள்ள வேண்டுமென்று மேசைக்கடியில் கைநீட்ட வேண்டிய அவசியமில்லாலும் போகும். 0 0 0

0 0 0

நெய்வேலியிலே வாரியார் சுவாமிகளின் வீட்டை ஒரு கூட்டம் தாக்கி அவர் பூஜிக்கும் விக்கிரகங்களை சேதப்படுத்தியதாக பத்திரிகையில் செய்தியைப் படித்துத் திடுக்கிட்டேன்.

'திருஞானசம்பந்தர்' பற்றி முதல்நாள் பேசுகையில், அவர் ஏதோ கூறியது அண்ணாவின் அன்பர்களில் சிலருக்கு ஆத்திரம் வந்து இவ்விதம் நடந்ததாகத் தெரிகிறது. வாரியார் அவர்கள் பகிரங்கமாக மனனிப்புப் தெரிவித்துள்ளார். அவர் சுகமில்லாததால் மறுநாள் பேசாமல், பொலிஸின் யோசனைமீது நெய்வேலியைவிட்டுப் புறப்பட்டுவிட்டதாக அச்செய்தி தெரிவித்தது. மேடையில் பேசுகையில் ஒருவர் எவ்வளவு கவனமாகஇருக்கவேண்டும்!

நேற்று முன்தினம் இரவு 'திருஞானசம்பந்தரைப்' பற்றி வாரியார் சுவாமிகள் இந்திய வானொலியில் பேசியதைக் கேட்டேன். வழக்கம் போல் அருமையாக இருந்தது. 'மொழிக்காக சிறை செல்லுவது பெருமையாகும்' என்று தி. மு. க.வை போற்றியும் பேசினார்.

நெய்வேலி சம்பவத்தைப் பற்றி ஒரு வழக்கை பொலிசார் பதிவு செய்துள்ளனராம். தம்மைத் தாக்கியவர்கள்மீது வழக்குத் தொடர வேண்டாமென்று அவர் போலீசுக்கு கூறுவதே காந்தீய வழியாகும்,

அவர் மன்னிப்புக் கேட்டுக்கொண்டதால் அவரை ஆத்திரத்தால் தாக்கியவர்களும் வருத்தம் தெரிவித்துக்கொள்வதால் இந்த துரதிருஷ்ட சம்பவம் வீணாக வளராமல் நல்லபடியாகத் தீர்ந்துவிடும். தமிழரிடையே ஏற்படும் எந்தத் தகராறும் இவ்விதம் அன்புவழியிலே அமைதியாகத் தீர்த்துக் கொள்ளமுடியாதா?

(7-ம்கலம் பார்க்க)

மத்திய மாநில உறவுகள்

# தமிழ் நாடு எப்பொழுதுமே நேசக்கரம் நீட்டும்

## கருணாநிதி மீண்டும் வலியுறுத்தல்

கோயம்புத்தூர், பெப். 24

**மத்திய அரசுடன் தமிழ் நாட்டு அரசாங்கத்துக்கு இருந்துவரும் உறவுகள் பாதிக்கப்பட்டுவிடும் என்று எவரும் அஞ்சத் தேவையில்லை என்று தமிழக முதலமைச்சர் மீண்டும் வலியுறுத்தியிருக்கிறார்.**

தமிழ்நாடு அரசுக்கும் மத்திய அரசுக்குமிடையிலிருந்து வரும் நேச உறவுகள் பாதிக்கப்பட்டுவிடலாம் என்று வட இந்திய பத்திரிகைகள் சில தெரிவித்துள்ள அச்சம் குறித்து திரு. கருணாநிதி இங்கொரு கூட்டத்தில் குறிப்பிடுகையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

மத்திய அரசுக்கும் தமிழ் நாட்டுக்குமுள்ள உறவுகள் பாதிக்கப்படமாட்டாது. எப்பொழுமே நாம் நேசக்கரம்நீட்டிவருவோம் ஆனால் தமிழ்நாடு தனது உரிமைகளுக்காக எப்பொழுதுமே குரல் எழுப்பத் தவறாது என்றும் திரு. கருணாநிதி கூறினார்.

வரட்சியால் பாதிக்கப்படக்கூடிய பகுதிகளுக்கு உடனடி நீர்ப்பாசன வசதிகள் செய்யப்படும் என்றும் இல்லையெனில் விளைச்சல் பாதிக்கப்படும் என்றும் திரு. கருணாநிதி கூறினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org